தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஉ | விய—ஆடி 1946—ஜூலை | மலர் ச

மகிழ்ச்சியும் வாழ்த்தும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதித் தலைவராகப் பேரறிஞர். திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் M. A. Ph. D; அவர்களையும் அப்பல்கலைக்கழகஇயற்கைப்பொருட்கலைப் பகுதித்தலைவராக (Physics Professor) திரு. T. P. நவநீதகிருட்டினன் M; A; அவர்களையும் தேர்ந்து அப்பல்கலைக் கழகத்தார் அமர்த்தியமை கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைகின்றோம்.

இவ்விரு அறிஞர்களும் நம் சங்க உறுப்பினரும் தமிழ்ப்பொழில் உறுப்பினரும் ஆவார்கள். நம் தமிழ்ப்பொழிலின் வளர்ச்சி கருதியும் சங்கத்தின் ஆக்கங்கருதியும் தமிழ்ப்பொழிலுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி அளித்துப் போற்றி வந்தவர்கள். இஃதன்றியும் அறிஞர் சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தமிழ்ப்பொழிலில் "உழைப்பால் உயர்ந்த ஒருவர்" என்னும் தலைப்பில் வெளிவந்த கட்டுரையை ஒரு தனி நூலாக்கிச் சங்கத்திற்கு உரிமையாக்கி யுள்ளார்கள். இங்ஙனமே திரு. நவநீதகிருட்டினன் அவர்களும் சங்கத்திற்கு உதவிபுரிந்துள்ளார்கள்.

இவ்விரு மணிகளின் உயர்வு சங்கத்தின் உயர்வாதலின் இவர்களைப் பாராட்டுதல் நம் சங்கத்தைப் பாராட்டுதலாகும்.

அறிஞர். சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் கடந்த எட்டியாண்டுகளாக அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவவை உறுப்பினராக (Senate Member)வும், அண்ணாமலைப்பல்கலைக்கழகப்பேராட்சிப் பேரவை (Syndicate Member) உறுப்பினராகவும் இருந்து பெரும் பணி புரிந்துள்ளார்கள். பேராட்சிப் பேரவையின் முதற் கூட்டத்திற்குச் சென்ற அறிஞர் சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் ஒரு வகுப்பினர் பெற்று வந்த தனி உரிமைகளுக்கு அப் பேரவை இடந்தரக் கூடாதென்றும், எல்லா வகுப்பாருக்கும் சம உரிமைகள் வழங்க இப் பேரவை உளங்கொள வேண்டுமென்றும் துணிந்து நின்று உறழ் உரையாடினார்கள். *1929*-முதல் *1941*-வரை, பல்கலைக் கழகப் பாடத்திட்ட அமைப்புக் குழுவிலும் (Board of Studies) தேர்வு ஆய்ந்துரைப்பார் குழுவிலும் (Board of Examiners) ஒரு வகுப்பினருடைய ஆட்சியே நிலைத்து வந்தது. ஒவ்வொரு குழுவிலும் எழுவர் எண்மர் உறுப்பினராயின் அத்துணைபேரும் பெரும்பாலும் ஒரு வகுப்பினராக இருந்து ஆட்சி செலுத்தி வந்தனர். இத்தனி உரிமையைப் போக்குதற்

குரிய வழிகண்டு, போக்கித் தகுதியுடைய முகம்மதியர்களும், கிறித்துவர்களும் ஏனையோரும் இடம்பெற ஏற்பாடு செய்தவர் அறிஞர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களே யாவார்கள்.

பல்கலைக் கழகத் தேர்விற்குரிய பிற மொழி நூல்களைத் தமிழ் மொழி வாயிலாகவே கற்பித்துத் தேர்வு செய்யவேண்டும் என்னும் முடிபினைப் பல்கலைக் கழகப் பேராட்சிப் பேரவையின்கண் கொண்டு சென்று அம் முடிபினை நிறைவேற்றி வென்றி கண்டவரும் சிதம்பர நாதரே ஆவார்கள்.

"தமிழ் வித்துவான் வகுப்பு" என்பதற்கு மாருகத் "தமிழ்ப் புலவர் வகுப்பு" என்று பெயரிட வேண்டுமென்ற முடிபினை இராவு சாகிபு, ஐ. குமாரசாமி பிள்ளை, B. A. அவர்கள், பல்கலைக் கழக ஆட்சிக் குழுவவையிற் கொணர்ந்து நிறைவேற்றினுர்கள். அவர்கள் நிறைவேற்றிவைத்த முடிபினைப் பல்கலைக்கழகப் பேராட்சிப் பேரவையிலுள்ளார் (Syndicate Member) ஒருவரும் எதிர்க்கா வண்ணம் செயலாற்றி அம்முடிபு அப் பேராட்சி அவையிலும் நிறைவேறச் செய்தவர் அறிஞர் சிதம்பரநாதர் அவர்களே.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் "வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ முறையில்" அலுவல்கள் வழங்கப் பெறல் வேண்டும் என்னும் முடிபினை அப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு அவையில் கொண்டு சென்று அவ் வவையினரிடம் போராடி அம் முடிபினை ஒப்புக் கொள்ளச் செய்து, பற்பல புதிய நியமனங்களில் தமிழர்கள் இடம் பெறுமாறு செய்தவர் அறிஞர் சிதம்பரநாதர் அவர்களே ஆவார்கள்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ஏற்பட்ட நாட்டொட்டு வட மொழிப் (சமஸ்கிருதப்) பகுதியின் கீழ் ஆட்சியில் வைக்கப்பட்டிருந்த தெலுங்கு, மலையாளம் ஆகிய திராவிட மொழி ஆசிரியர்களை மிக்க எதிர்ப்பிருப்பினும் அத்தளையினின்றும் விடுவித்துத் தமிழ்த்தாயோடு சேர்ப்பிததவர்களும் சிதம்பர நாதரே ஆவார்கள்.

பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கட்கு அறிவியற் கலைப் பகுதியில் (Science) நூற்றுக்கு ஐம்பதின்மருக்குமேல் இடந்தர வேண்டுமென வாதித்து, அச்செயல் நிறைவேறுதற்குக் காரணராய் இருந்தவரும் அறிஞர் சிதம்பர நாதரே ஆவார்கள்.

இங்ஙனம் பல்லாற்ருனும் தமிழர் ஆக்கத்திற்கும் தமிழ் மொழி ஆக்கத்திற்கும் அப்பல்கலைக் கழகத்தில் அமர்ந்து தொண்டாற்றிச் சிறப்பித்து வநத அறிஞர் சிதம்பரநாதர் அவர்கள், இன்று அப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமைக்கு யாம் மேலும் மகிழ்ச்சி யடைகின்ருேம். இங்ஙனமே தமிழர் உயர்வு கருதிப் பல்கலைக் கழகத்தில் உழைத்து வந்த திரு. த. பு. நவநீதகிருட்டினன் அவர்களை இயற்கைப் பொருட்கலைப்பகுதித் தலைவராக நியமித்ததையும் யாம் பாராட்டுகின்ருேம்.

இவ்விரு மணிகளும் தமிழன்னையின் தண்ணருளால், மேன் மேலுயர்ந்து, பற்பல உயர் பதவிகளைப் பெற்றுச் சிறக்க வேண்டுமெனத் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்ருேம்.

வருந்துகின்றேம்.

சேது காவலர், பேரவைப் பெரும்புலவர் ரா. இராகவையங்கார் அவர்கள் 11—7—'46-ஆம் நாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகு எய்தினுர்கள் என்னும் செய்தி கேட்டு மிக்க வருந்துகின்றேம். மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று வெளிப்போதரும் "செந்தமிழ்" எனும் பேருடைய திங்கள் தாளுக்கு முதலாசிரியராக அமைந்து தம் சீரிய கூரிய ஆராய்ச்சியுரைகளால் அறிஞர் உளங்களையெல்லாம் பிணித்தார்கள். பல தமிழ் நூல்கள் திருத்தமுற வெளிப்போதரப் பல்லாற்ருனும் உதவிபுரிந்துள்ளார்கள். "உரையும், பாட்டும் சொற்பொழிவும் வல்ல உரன்மிகு புலவர், திரு. இராகவையங்கார் எனப் பேரறிஞர், தென்கலைச் செல்வர் உ. வே. சாமிநாதையர் அவர்களே புகழ்ந்துரைத்தார் எனின் யாம் இவரைப் பற்றி என் கூறப் போகின்றேம். இவர்கள் எழுதியுள்ள பாரிகாதை, புவியெழுபது போன்ற பாவானியென்ற நூல்களும், சாகுந்தலம் முதலிய உரைநடை நூல்களும் இவர்கட்கு அழியாப் புகழை அளிக்கக் கூடியன. அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பகுதித் தலைவராயிருந்த காலத்தில் நம் சங்க ஆண்டுவிழாவில் தலைமைதாங்கி அரிய விரிவுரையாற்றி அன்பர் உளங்களையெல்லாம் பிணித்தார்கள். இத்தகுபெரியாரை இழந்து வருந்தும் இவர் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த துயரினை அறிவித்துக் கொள்ளுகின்றேம். இன்றமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய இவர் இன்னுயிர் இறைவன் திருவடி நிழலில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்தி வணங்குகின்றேம்.

நம் சங்க உறுப்பினர் கரந்தை, திருவாளர் அ. சேக்குப்பிள்ளை அவர்கள் துடுமென விய, ஆனிமீ 21-ஆம் நாள் இறைவன் திருவடி நிழல் அடைந்தார்கள் என்பதனைக் கேட்டு மிகமிக வருந்துகின்றேம். பிள்ளையவர்கள் நல்ல வள்ளன்மையும் எளியோருக்கு இரங்கும் இயல்பும் உடையவர்கள். இவர்களால் பலர் நலன்பெற இருந்தனர். தன் மனைவி மக்களும், சுற்றமும், நட்பும் வருந்திக் கண்ணீர் உகுக்க இவ்வளவு இளமையிலேயே இவர்கள் துடுமென மறைந்தது மிக்க வருத்தத்தைத் தருகின்றது. இவரைப் பிரிந்துவருந்தும் இவர்மனைவி மக்களுக்கும், சுற்றத்தாருக்கும் எம் ஆழ்ந்த துயரினை அறிவித்துக் கொள்ளுகின்றேம். இவர் இன்னுயிர் இறைவன் திருவடி நிழலில் இன்புற்றுத்திளைக்க இறைவனை வழுத்தி வணங்குகின்றேம்.

கோ. சி. பெரியசாமிப் புலவர்,
பொழிலாசிரியர்.

வள்ளுவர் புரட்சிக்காரர்.

புலவர். மு. கோவிந்தசாமி அவர்கள்,

சீர்திருத்தக் காரனும் புரட்சிக் காரனும் வேறுபட்டவரல்லர்; இருவரும் நாட்டை, நாகரீகம் சிறப்பு இவற்றை நோக்கி முன்னேற்றிச் செல்லும் ஒரே குறிக்கோளினையுடையாரே; ஆனால் புரட்சிக்காரன் தீவிரவாதி; அவனிடம் அஞ்சாமை, பொறுமை, துடிப்பு, உணர்ச்சி இவை மிகுதியாக வேண்டும்; மாற்றத்தில் என்றும் விரைவை நாடு பவன்; அதற்கென உயிரைப் பொருட்படுத்தாததோர் உண்மையும் திண்மையுங் கொண்ட நெஞ்சம் அவனிடமே உண்டு. பழமையைப் புதுமையாக்கல், உள்ளத்தைச் செம்மைப்படுத்தல், குற்றங்களை யகற்றுதல் இவற்றினும் இவனிடம் 'புதுமைகள்' மிகுதியாகக் காணப்படும்;

என்றும் அழியா திலங்கும் கொள்கைகளால் உலகைத் திருத்த வல்ல திருக்குறள் அருளிய 'வள்ளுவர்' உள்ளத்தே இப்புரட்சி கொண்டு வந்த மாறுதல் தமிழகத்திற்கே ஓர் புது ஒளியையும் புது வாழ்வையும் அளிப்பதாயுள்ளது; அவர்தம் நூலகத்தே காணும் கருத்துக்கள் மட்டுமன்றி, அந்த நூலமைப்பிலேயே எத்தனையோ மாறுதலுடைமையைக் காண்கிறோம்; மனிதனின் மன மாறுதலுக் கேற்ப அவனுடைய உடற் பொலிவும் அமைப்பும் மாறுவதும் இயற்கைக் கொத்ததோர் உண்மை தானே?

மிகச் சுருங்கிய சொல்லில் விரிந்த உண்மைகளை யெல்லாம் விளக்கிப் படிப்போர் உள்ளத்தே அழகு, ஊக்கம், இனிமை இவற்றை யெழுப்பும் 'குறள் வெண்பாவில்' நூல் அமைத்த புரட்சி தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே இவராற்றான் தூண்டப்பட்ட தெனலாம்; ஏன், இதுவே அம்முறையில் முதல் நூல் என்பேன்; அகத்தியர் இருந்தார், வெண்பாவில் இலக்கணம் இயற்றினார் என்பதை நான் நம்பவில்லை; அது உண்மையின் முன் உறுதியாய் நிற்க மாட்டாத காலற்ற கட்டுக்கதையாகும்; அப்படியாயின் ஏன்? பழந்தமிழ் நூல்களில் ஒன்றுவிடாமல், எல்லாம் ஆசிரியப் பாவால் அமைந்துள்ளன?

மற்றும், தமிழில் முதன்முதல் எழுதப்பெற்ற அறநூல் இதுவே யாகும்; பண்டைத் தமிழ் நூல்களில் இடையிடையே அறவுரைகள் கூறப்பட்டனவன்றி, தனியாக அறநூல் செய்து என்றும் இருந்த தாகவும் தெரியவில்லை; அந் நூல்களில் அறம், பொருள், இன்பம் இவற்றைத் தனித்தனிக் கூறப்படுமன்றி இதுபோலத் தொகுத்து மூன்றையும் ஒரே நூலில் இத்தனை யழகும் தெளிவுமுறக் கூறப்பட்ட தில்லை; சிறப்பாக அகநானூறு, கலித்தொகை ஆயவற்றில் இன்பமும், புறநானூற்றில் பொருளும், மணிமேகலையில் அறமும் விளக்கப்படும்; புறநானூறு போன்ற தொகுப்புக்களில் மற்ற பகுதிகளும் விரவி வரும்; இன்னும்,

ஒரு கருத்தினை (தலைப்பு) இலக்கணங் கூறித் தெளிவுப் படுத்துந்திறன் திருக்குறள் ஒன்றற்கே அமைந்த சிறப்பெனலாம்; சான்றாக,

'இன்சொலால் ஈரமளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்'

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.'

என்ற குறள்கள், 'இன்சொல்' 'தவம்' என்றால் என்ன? என்பதனை எவ்வளவு தெளிவாக விளக்கும் இலக்கணமாக அமைகின்றன? மற்ற நூல்களில் இம்முறை அருமை.

வரைவின் மகளை (தாசி) வெறுத்தலும், பிறர் மனையாளை விரும்பாமையும் தமிழில் புதிதாக இவராலேயே முதலில் இணைக்கப்பட்டதெனலாம். அதன் முன் தலைவி ஊடும்போது தான், வரைவின் மகளை அதுவும் அவள் வெறுப்பாள். இவ்விரண்டுடன், புலால் நீக்கம், கள், பொய், சூது இவை யொழியும். இவற்றை யெல்லாம் தமிழ் நாட்டின் பொது அறமாக முதலில் பறைசாற்றி மக்களை யெழுப்பியவர் வள்ளுவரேயாவர், அதன் முன் கள்ளும் மாமிசமும் தமிழரின் விருந்துணவுகள், ஏதோ ஒரு பிரிவினர் இவற்றை நீக்கி வாழ்ந்தமை பத்துப்பாட்டில் எங்கோ ஓர் மூலையில் கூறப்படுகிறது. இத்தகைய சிலங்களை வற்புறுத்துவதனால், இவரைச் 'சைனர்' எனப் பலர் முடிவு கட்டுகின்றனர்?

இங்ஙனம் நூலமைப்பே இவர் எவ்வளவு புரட்சி மனப்பான்மையினர் என்பதனைப் புலனாக்குகின்றது. இவர் கூறிய உண்மைகள் 'புரட்சிக்காரனுக்குரிய' அரிய ஆற்றலும் அறிவும், அஞ்சாமையும் இவரிடம் நிறைந்திலங்கியமை விளக்குகின்றது.

உற்றார் உறவினர் என்று வேறுபாடில்லாது உயிர்களை யெல்லாம் ஒரே நிறையில் வைத்து அவற்றின் உறுதுயர் நீக்கத் துடிக்கும் அருளும், அதற்கெனச் செயற்கரிய செயல்களை யெல்லாம் செய்யும் ஆற்றலுமே புரட்சிக்காரனின் அணிகலன்களாம். சீர்திருத்தம் ஓர் குறிப்பிட்ட சமூகத்திலும் இருக்கலாம். ஆனால், புரட்சி என்றாலே அது நாடு முழுதும், ஏன் உலகமுழுதும் பரவிய பான்மையுடையதாகிறது, அங்கு கட்டுப்பட்ட அன்பு செல்லாது, அருளே வேண்டும். அவ்வருள் பின்னர், தன்னலனைக் கருதாது கிழித்தெறிந்து விடுவதால், பிறர்க்கெனச் செல்கையில் 'செயற்கரியதென' அஞ்சுவதோ கூசுவதோ ஆங்கில்லை. தன்னுயிர் போய்விடுமோ, தன் பொருள் குறைந்துவிடுமோ என்றவிடத்தேதான் அச்சமும் கூச்சமும். பிறர்க்கெனப் பணிசெய்கையில் காணும் தோல்விகளையெல்லாம் கடக்கும்போதே அவனிடம் 'புதுப் புதுநெறிகளும், முறைகளும் தோன்றுகின்றன, காந்திஜி, அசோகர், டால்ஸ்டாய் இவர் தம் அஹிம்ஸையும், ரூஸோ, தாந்தே, சுபாஷ் இவர்களின் புரட்சிகளும் எத்தனைப்புதுமுறைகளை உலகிற்களித்தன! பழமைகளை உழன்றன?

இவ்வழிச் செல்லும் உயர் மனிதன், தன்னை மறந்ததால், நாட்டு மக்களுக்கெல்லாம் உறவாகவே, சொந்தமாக ஆய்விடுகிறான், அவனைக் காப்பாற்றும் பொறுப்பை மக்களே, தங்களைவிடக் கருத்துடன்

பெற்றுக் கொள்கின்றனர். இல்லாவிடில் நேரு எங்கேயோ கைது செய்யப்பட்டால் இந்தியாவின் எல்லா மூலையிலும் ஏன் துப்பாக்கிப் பிரயோகமும், அதில் சாவும், தடியடியும், உண்ணுவிரதமும் ஏற்பட வேண்டும்? பின்னர் அவனது குடும்ப வறுமைபற்றிக் கவலையில்லை. காந்திஜிக்கு எவ்வளவு சொத்தெனக் கேட்டு அவரை மதிப்போர் இன்று யார்? உலகம் வாழத்தான் வாழும் உயர்வு கிடைத்தால் அவன் தனி வாழ்வில் உற்ற இழிவுகளுங்கூட மறைந்துவிடும், ஏன் சில சமயங்களில் அவை பெருமையாகவும் கருதப்படலாம்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணேட்டம் வாய்மையென்

றைந்துசால் பூன்றிய தூண். இவ்வைந்து தன்மைகளே ஒருவனை மனிதனுகவோ, மனிதர்க்குழைக்கும் புரட்சிக்காரனுகவோ மாற்றும். அன்பும் வாய்மையுமே இன்று காந்திஜியின் அஹிம்சையும் சத்தியமும். ஒப்புரவு அவரது தியாக வாழ்வு. கண்ணேட்டம் அவர்க்குள்ள பொறுமையும் மன்னிக்குந் தன்மையும். நாணந்தான் தன் பிழைக்கும் பிறர் குற்றத்திற்கும் இரங்கி வருந்தி உண்ணு விரத மிருப்பது. இவ்வைந்து இயல்புகளே வள்ளுவரைப் பெரிய மனிதராக உலகிற் களித்தவை; உயிர்களிடம் அசையா அன்புடன் அவற்றின் பிழை பொறுத்தும் தான் பிழை செய்தல் தவிர்த்தும் வாழும்போதே ஒருவன் 'பிறர்க்குழைக்கும்' பெருந் தன்மையைப் புரிந்து கொண்டான் என அறிகிறேம்; அன்றிப் பிறர் தன்னை இழிப்பதை, ஏன் அடிப்பதைப் பொருட்படுத்திக் கொண்டிருந்தால் அவன் பிறர்க் குழைப்ப தெப்போது? அந்த மனப்பான்மையே வராதே! தென் ஆப்ரிக்காவில் ஆங்கிலேயன், தன்னை அறைந்ததற்கு வழக்காடிக் கொண்டிருந்தால் காந்திஜி இந்தியர்க்கு வழக்காட்ட மனம் பற்றியிருக்க முடிந்திருக்குமா?

இவர்களுடைய உள்ளம் என்றும் நாடு வாழும் வழியை எண்ணி யெண்ணியே மெலிவடைகின்றது; இவர்களின் கனவெல்லாம் நாடு தான்; நாட்டிற்கென இவர்கள் தமக்குறும் இகழ்ச்சி, பட்டினி, சிறை, நாடு கடத்தப்பட்டு அலேதல் ஏன் வேண்டுமானுல் சாவினை ஏற்றுக்கொள்வதற்குங் கூட அஞ்சுவதில்லை; தம் நாடும் உலகமும் திருந்தி மலர்ச்சி யடையத் தம்முயிரைத் தந்தால் தான் முடியு மென்றுல் அதனைப் பெரும் பேருகக் கருதி மகிழ்ச்சியொடும் வர வேற்பார்கள்; தூக்குக் கயிறைக் காதலியாக முத்தமிடுவார்கள், பகவத்சிங் வரலாற்றைப் படித்ததில்லையா? இதனுல், முரட்டுத் தனமாய், தாம் புரட்சியில் உயிர் நீத்ததாய்ப் பெரும்பேர் எடுக்க வேண்டுமெனக் கொண்டே, நாட்டையென்றும் இரத்தப் புரட்சிக்கே தூண்டிக்கொண்டிருப்பவன் உண்மையான புரட்சிக்காரன் அல்லன். அவன் குறி புரட்சி செய்வதில்லை; ஆனுல் நாட்டின் உள்ளத்தே மாபெரும் புரட்சியைக் காண்பதேயாகும்; அதற்கென எவ்வளவு இயலுமோ அத்தனை யழிவும் குழப்பமும் வீண் முயற்சியுமின்றி அந் நிலையினைக் கொண்டு வருவதே அவன் கடமையும் திறமையும்; புரட்சி நடந்தால் தான் முடியுமென்றுல் அதற்கெனத் தயங்க மாட்டான்; அதற்குரிய ஆற்றலும் அவனிடம் இருக்கவேண்டும்

அவ்வளவு தான்; செய்யத் தக்கதைத் தவருமல் செய்தே முடித்தலும், தகாததைக் கண்டிப்பாய்த் தவிர்த்து விடும் வலிமையும இரண்டும் அவனிடம் இருக்கவேண்டிய சிறந்த இயல்புகளாகும்.

இன்ன வலிமை படைத்தோர் யாருக்கு அஞ்சவேண்டும்? ஆண்டவன் ஆணையும் தங்கள் நெறியைத் தடை செய்யுமாயின் அதனைக் கொஞ்சம் அப்புறம் நில் என்று ஆற்றுதல் வலலவர்கள் இவர்கள்; பின்னர் மக்களைப்பற்றி, மன்னனைப்பற்றிக் கேட்பானேன்; 'ஊழி பெயரினும் தாம் பெயரார்' எனக் கூறினரே வள்ளுவர் அச் சான்றோர் இவர்களே யெனலாம்; இவர்கள் கொள்கையும் கட்சியும் அரசாங்க வேலை கிடைத்தால், வாழ்க்கைக்குப் போதிய செல்வம் கிடைத்தால், தன்னை ஒரு மனிதனுக நாடு முழுதும் அறிந்து கொண்டால், ஒரு சிலா தன்னைத் தலைவனெனப் பைத்தியக்காரத் தனமாய்ப் பின் பற்றினுல் அதுவே போதுமென நிறைவடைந்து விடுவதில்லை.

நாடு முழுதும் மனமாறத் தன்னை நம்பினுலொழிய, தன் கருத் தெல்லாம் நாடடில் மக்கள் வாழ்க்கையில் மாறுதலைக கொணர்ந்தா லொழிய, அதனுல் அவர்கள் களிப்பது கண்டு தாமும் இன்புறும் அந் நிலையினை அடைந்தாலொழிய இவர்கள் கொள்கை 'ஆணிவேர்' போல அசையாது நின்று கொண்டுதானிருக்கும்; தனக்கு வரும் இன்னல், இறுதி இவற்றை மகிழும்; ஆனுல் தன் கொள்கைக்கு இழிவு வருமானுல் அதனை வருந்தி, எதிர்த்து நிற்கும் பேராண்மை படைத்தோரல்லவா இவர்கள்!

தன்னை ஆதரிக்க, தன்னைத் தவிர ஒருவரும் இல்லாமல் இருக்கலாம்; அதே பொழுதில் உலகமெல்லாம் திரண்டு தன்னை யெதிர்த்து வரலாம்; அப்போதும் அவன் உள்ளம் அசையாது, நாட்டின் நலத்திற்குரியதெனக் கண்ட கொள்கையை விடாது பற்றி நிற்பான் உண்மைப் புரட்சிக்காரன்.

இவர்கள் வாழ்வே வள்ளுவர் புகழ்ந்த வான் மழையாக, ஊர் நடுவில் குளமாக, மருந்துக்குப் பயனுகும் மரமாக யாவர்க்கும் என் றும், தன்னை முழுதும் அளித்து விடுகின்றது. இவற்றிற்கு உலகம் செய்யும் கைம்மாறு யாது? ஆனுல் இதுவரை இவர்களை மக்கள், வெறியரெனவே, கொடியரெனவே மதித்து வந்துள்ளனர். இத் தகைய நன்றியுடைய மனிதக் கூட்டத்திற்காக இப்பெரிய மனிதர் எத்தனைக்காட்டை, மலையை இருளில் கடந்திருப்பர்; பதுங்கி வாழ்ந் திருப்பர். பிச்சையேற்கும் இழிசெயல் புரிந்தும் அம்மனிதர்க்காக உழைத்திருப்பர். கெதேயும், தாந்தேயும் தந்நாட்டினராலேயே விரட்டப்பட்டு எவ்வளவு அல்லற்பட்டனர்!

ஆனுல், இத்தகைய மாமனிதர்; புரட்சிக்காரர் சீறுவார்களா னுல் எவ்வளவு வலிமைபடைத்த அரசும் சிலநாட்களில் பறந்துபோய் விடுகிறது. இவர்கள் மனமுடைந்து சிறிது வருந்தினுல் போதும். உணர்ச்சி பொங்கிய ஒரு வார்த்தை போதும். அதிலுள்ள உண்மை

மக்கள் வலிமையை யெல்லாம் வயப்படுத்தி விடுகிறது. இப் பெரியோன் சொல்லலும் தீயில் குதிக்கும் நெஞ்சுரத்தினை எப்படித் தான் அவ்வளவு விரைவில் பெறுகிருர்களோ? எவ்வளவு தான் பெரிய நாடனுலென்ன, காடு தான்! பீரங்கியும், வெடிகுண்டும் பட்டாசு தான். அரசனும், சேனையும் கரிசல் மண்ணுய் விடுவர். லெனினும், டிராட்ஸ்கியும் ஜார் ஆட்சியைப் படுத்தின பாடென்ன! அவன் ஆட்சி இன்று எங்கே? கண்ணகியின் சொல்லில் பாண்டிய நாடு பட்ட நிலை யென்ன?

வள்ளுவர் புரட்சி கொண்ட கருத்துக்களில் இரண்டினைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிலிருந்தே அவர் உள்ளம் தெளிவாய் விடும். செயல் செய்யாமல் சோம்பேறியாய்த் தூங்காதே. செயலே மூச்சு இதுவே கீதை. உழைப்பவனுக்கே சோறு. சட்டப்படி, நீதி முறைப்படி சோம்பேறிக்கு அவனுக்கு நூறுகாணி யிருக்கலாம். சோறுகிடையாது. அப்படிச் சோம்பேறியாக்கிப் பிச்சைகேட்டுண்டு பிழைக்கும்படி ஓர் அரசாங்கம் செய்யுமானுல் அதனை அழிப்போம். அது மக்கள் உரிமையென இன்று மும்முரமாகச் சோஷலிஸம் பேசுகிருேம். அன்று வெறித்தனமாய்க் கடவுள் எழுதிய எழுத்து எனப் பலர் ஏங்கிச் சாவதை; அவரை ஏமாற்றி யுறிஞ்சுவதைக் காண்கிருர் வள்ளுவர். ஆத்திரம் பொங்குகிறது. இந்த மூடத்தனமான எண்ணத்தை முதலில் மாற்றியாக வேண்டுமெனத் துடிக்கிருர்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். என்று சீறுகிருர்.

அப்படி மனிதரைப் படைக்கும் ஒரு கடவுள் கருதிப் படைப்பருயின் அவன் மடையன்; அழிக அவன் அலைந்து திரிந்து, எனச் சபிக்கிருர்.

சமூகத்தில் சில பிரிவினர் உண்மையை மறந்தோ, மறைத்தோ மக்களை ஏமாற்றுகின்றனர். பிறப்பில் தாங்கள் உயர்ந்தோர் எனவும், மற்றவர் தங்கட்கு அடங்கி நடக்கவேண்டும் எனவும் விதிக்கின்றனர். தாங்கள் எப்படி ஒழுக்கங்கெட்டு நடந்தாலும் குற்றமில்லை; அதனைக் குறை கூறுவது பாவம்; வேதத்தைக் கையில் அழகாக வைத்திருந்தாலே போதும். தங்குலம் காப்பாற்றப் பட்டதாக யாவரும் மதிக்க வேண்டும எனப் பரப்புகின்றனர். இன்று இப்படி நம் நாட்டில் பிறப்பிலேயே உயர்வு, தாழ்வு கருதும் வகுப்புக்கள் ஆதித்திராவிடர் தவிர மற்ற எல்லா இனமும் எனலாம். இந்நிலை கண்டு கொதிப்படைகிறது அவர் மனம். மனிதத்தன்மை, ஒழுக்கம் இதனைக் காப்பாற்றினுலன்றி மனிதனை மனிதனுகவோ, உயர்ந்தவனுகவோ மதிக்க வேறு எந்த எளிய புறச் செயலும் தக்க காரணமாகாது என்பதைக் கூற விழைகிருர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனச் சட்டத்தை மாற்றிப் பழமையை உடைத்தெறிகிருர்.

(தொடரும்.)

சைவத்தின் இற்றைநிலை

ஔவை. சு. துரைசாமி பிள்ளை, அண்ணாமலைநகர்.

அனைத்திந்திய வரலாற்றுக் காங்கிரசில் நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு.

நம் தமிழ் நாட்டிலும் இதனைச் சூழவுள்ள பிற நாடுகளிலும் இப்போது பல வேறு துறையில் மாறுதல்கள் வேண்டி மக்களிடையே கிளர்ச்சிகள் தோன்றி நிலவுகின்றன. சிறப்பாக, தமிழ் மக்களிடையே அரசியல், வாணிபம், பொருளாதாரம், சமுதாயம் முதலிய பல வகைகளிலும் கிளர்ச்சிகள் உண்டாகியிருக்கின்றன. அரசியல் கிளர்ச்சி யாவரும் நன்கறிந்தது. வாணிபத் துறையில் வடநாட்டு முதலாளிகளும் பிறநாட்டவரும் புகுந்து தமிழ் மக்களைச் சுரண்டிச் செல்வது கூடாது; விற்பனை வகைகளில் மிகுதியான கட்டுத் திட்டம் கூடாது; அது தனித்து வளர வேண்டுமெனக் கிளர்ச்சியெழுகிறது; பொருளாதாரத் துறையில், நாட்டில் வாழும் மக்களது வருவாய் குறைந்திருப்பதால், வாழ்க்கை முறை தாழ்ந்த நிலையில் உளது; வாழ்க்கை நிலையை யுயர்த்தல் வேண்டும்; அதற்கேற்பப் பொருள் வகைகள் உயர்ந்தோர்க்குப் போல எளியவரும் பெறத்தக்க வசதி யுண்டாதல் வேண்டும்; கைத்தொழிற் சாலைகளும் பிறவும் பொதுவுடைமையாதல் வேண்டுமெனும் கிளர்ச்சி தோன்றியுளது. சமுதாயத்தில் சாதி வேற்றுமையும் மக்களிடையே படிப்பின்மையும் இருத்தலாகாது; வாழ்க்கைக்கு இன்றியமையாத துறைகளில் எல்லாம் சாதி சமுதாய வேற்றுமைகளைப் புகுத்துதல் சமுதாய வளர்ச்சியைக் கெடுத்து நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கிறது; இவற்றைத் தொலைக்க வேண்டும்; ஒரு சாதி பிற சாதிகளை யடக்கி மேனிற்பதும் ஒதுக்கப்பட்டவர் தாழ்த்தப்பட்டவர் எந்நாளும் முறையே ஒதுக்கப்படுவதும் தாழ்த்தப்படுவதும் ஒழிய வேண்டும் என்பன போன்ற கிளர்ச்சிகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் சமயத் துறையில் மாறுதல்களும் கிளர்ச்சிகளும் உண்டாகாமல் இல்லை. சமயங்களின் குறிகளாக விளங்கும் கோயில்கள் தூய்மையாலும் நற்செயல்களாலும் தெய்வ மணங் கமழ்வனவாதல் வேண்டும். தீயொழுக்கம்,, தீச்செயல், தீநினைவு தோன்றுமிடங்களாக நிற்பது தீதாகும். கோயிலுக்குரிய மிக்க செல்வங்கள் செவ்விய முறையில் பயன்படுதல் நன்று; கோயிற் பாதுகாப்புப் பணி வாணிபமாக நடத்தல் அறமாகாது; கோயில்கள் சாதிகுல வேற்றுமைகட்கு இடமாய், அவற்றை வளர்த்து மக்களொருமைக்குக் கேடு விளைவிக்கும் தீய நிலையமாய் இருப்பது ஒழிய வேண்டும் என்பன போன்ற கிளர்ச்சிகள் எழுந்துள்ளன.

இவை யொருபுறம் நிற்க, சிறுவர் கல்வி பயிலும் கல்வித் துறையிலும் பல மாறுதல்களுக்குரிய கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன,

இளைஞரது கல்வி முறை பல நூல்களையும் படித்து நெட்டுருச் செய்யும் தொழிலாதல் கூடாது; கற்கும் கல்வி ஒருவனைப் பிறர்க்குச் சுமையாயிராது தனித்து வாழும் தகுதி பயப்பதாக இருத்தல் வேண்டும். கற்கும் சிறுவர், வாழ்க்கைக்குரிய பொருள்களைத் தாமே தமித்தெண்ணித் துணியும் மனத்திண்மையுடையராக, மனப்பயிற்சி பெறுதல் வேண்டும். நலந் தீங்குகளைப் பகுத்தறிந்து செயல் முறையில் கொள்ளுவதும் தள்ளுவதும் செய்தற்குரிய வினைத் திட்பம் மன வளர்ச்சியின் பயனாக வுண்டாவது; அதற்கேற்பக் கல்விமுறையமைய வேண்டும் என்பன போலும் உணர்வு காரணமாகக் கிளர்ச்சிகள் எழுந்துள்ளன.

இங்ஙனம், எல்லாத் துறைகளிலும் மாறுதல் வேண்டிய கிளர்ச்சிகள் மிக்கிருக்க, நம் சமயத் துறையில் ஒரு முயற்சியும் இல்லையென்றெண்ணுதற்கு இடமில்லை. சென்னையில் உள்ள தென்னிந்திய சைவ சித்தாந்த சமாசம் சமய நூல்கள் பலவற்றையும் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு அடக்க விலைக்கு விற்குமாற்றால் பல்லாயிரக் கணக்கான மக்கள் சமய வுணர்வினராமாறு பெருந் தொண்டு செய்துள்ளது. இந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் விளைவாகத் தோன்றிய இந்து அற நிலையப் பாதுகாப்புக் கழகம், சமாசத்தின் துணைகொண்டு பல கோயில்களிலும் விழாக் காலங்களிலும் பிற காலங்களிலும் சமய வுணர்வு கொளுத்தும் சொற்பொழிவு நிகழ்த்தியும் சொற்பொழிவாளர்களை நிறுவியும் சமய வுணர்வு மக்களிடையே நிலவுமாறு செய்துள்ளது.

ஈண்டுக் கூறிய இந் நிகழ்ச்சிகளிடையே, நாட்டில் பரவிய மேனாட்டுக் கல்வி, அரசியலுணர்வு, விஞ்ஞான ஆராய்ச்சி, உலகியலறிவு முதலியவற்றின் பெருக்கத்தால்,, சில இயக்கங்கள் தோன்றி மக்களிடையே அரசியல், சமயம், சமுதாயம் முதலியவற்றின் பெயரால் நிகழ்ந்த தீய கொள்கை, செயல், ஆகிய இத் தீமைகளை எடுத்தோதி மக்களைத் தெருட்ட முற்பட்டன. உயிரொடு அனாதியே கிடக்கும் மலத்தின் கேடு குறித்து, அதன் மறைக்குந் திறங்களை அருட் சத்தி தோய்ந்து வெளிப்படுப்பது போல, சமய வொழுக்கத்தோடு மணந்து கிடந்த மடமையின் தீச் செயல்களை இக் கிளர்ச்சி வேகம் தோய்ந்து வெளிப்படுத்திவிட்டது.

இந் நிலையில் சைவர்களாகிய நாம் நம் சைவத்தின் வளர்ச்சி வரலாற்றை யாராய்ந்து, இதன் பயன் மக்கட்கு எய்தா வகையில் தடுத்து நிற்கும் இடையீடுகளையும் இடையூறுகளையும் விலக்கும் கடமையுடையராகின்றோம். 'தொன்மையவா மெனும் எவையும் நன்றாகா, இன்று தோன்றிய எனுமெவையும் தீதாகா' என உமாபதி சிவனார் கூறிய உயரிய கருத்தையுட்கொண்டு இக் காலத்துக்கும் நிலைக்கும் உரியவற்றைச் செய்ய முற்படவேண்டும். 'தாழ் வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும், ஊழ்' என்று அருணந்தி சிவனார் கூறியது நல்லறிவைப் பொருளற்ற மடமைக்கு அடிமையாக்கும் தன்மையன் றென்பது சைவரறியாத தன்று.

சைவம் என்பது சிவத்தோடு தொடர்பு கூட்டும் சமயமாகும். 'சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது' என்று திருமூலரும் கூறினர். ஆகவே, சிவத்தை வழிபடும் சமயம் சைவமென்பது விளங்கும். இச் சிவ வழிபாடு எக்காலத்திற் றேன்றியதென்று அறுதியிட்டுக் கூற முடியவில்லை. மோகெஞ்சதாரோ, அரப்பா முதலிய இடங்களிலும் சிவ வழிபாடு காணப்படுதலால், இப்போதைக்கு ஐயாயிர மாண்டுகட்கு முன்னும் சிவ வழிபாடு இருந்ததென்று அறிகின்றேம்.

இனி, நம் தமிழகத்தில் சிவ வழிபாடே மிக்கிருக்கிறது. செல்வத்தாலும் சிறப்பாலும் மேன்மையுற்றுத் திகழ்வன சிவன் கோயில்களே. இதனுல் தமிழுலகம் சைவ வுலகம் என்றும், சைவ வுலகம் தமிழுலகம் என்றும் ஒற்றுமை நயம்படக் கூறும் மரபும் உண்டாகியிருக்கிறது. சைவமும் தமிழும் வாழ்க என்று மக்கள் கூறுவதும் இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதை யறியலாம்.

தமிழகத்தின் தொன்மை நிலையைக் காண்டற்கு இப்போது துணை செய்யும் தமிழ் நூல்கள் தொல்காப்பியமும் சங்க விலக்கியங்களும் பிறவுமாம். தொன்மைக் காலத்தில் தமிழ் இயல், இசை, கூத்து என்ற முப்பிரிவில் வைத்து ஆராயப்பெற்றது. இயற் பகுதிக்கு வேண்டும் உலக வழக்கும் செய்யுள் வழக்கும் பொருளாகக் கொண்டு தொல்காப்பியம் உண்டாயிற்று. இதற்குச் சிறப்புப் பாயிரம் கூறிய பனம் பாரனர் என்பவரும், 'தமிழ் கூறும் நல்லுலகத்து, வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்' என்றே குறிக்கின்றர். ஏனை இசை, நாடகம் என்ற இரண்டன் இயல்புகளையும் தொல்காப்பியம் கூறுகின்றிலது. இதனுல், தமிழின் தொன்மை நலம் காட்டற்குத் தொல்காப்பிய மொன்றே போதுமென்பது நிரம்பாதென்று விளங்கும்.

இனிச் சங்க விலக்கியங்களும் சங்க காலத்து நிலவிய நூல்கள் அனைத்தையும் கொண்டுள்ளனவல்ல. எத்துணையோ நூல்கள் இறந்து போயின. கிடைத்தவை இப்போதுள்ளனவே. இவற்றல் அறியப்படும் தமிழ் நாகரிகம் முழுதும் அறியப்பட்ட தொன்றன்று. இவை, பொருளிலக்கணத் துறைக்கு அமைதியுடையவாய், பண்டைத் தமிழர் நாகரிகத்தை யுணர்தற்கு ஓரளவு கருவியாவனவாய், பண்டைத் தமிழரின் உலகியல் வாழ்விற் கமைந்த பண்பாட்டை யெடுத்தோதும் பெரு விளக்கங்களாய் நிலவுகின்றன. உலகியலோடு கலந்தும் கலவாமலும் செல்லும் சமய வுணர்வு கொளுத்தும் நூல்கள் தொல்காப்பியத்துக்கு முன்பே யிருந்தன என்றற்குச் சான்று இல்லாமல் இல்லை. 'அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்று தொல்காப்பியம் கூறுகிறது. இறந்தது, வயது முதிர்ந்தது. சிறந்தது, சமயம் கூறும் உணர்வொழுக்கம். சிறந்தது பயிற்றல் கூறுவதால், பயிற்றுதற்குரிய நூல்களும் நெறிகளும் இருந்திருக்கும் என்பது நன்கு விளங்கும். சங்க விலக்கியங்களும் தவமும் துறவும் கடவுள் வழிபாடும் பிறவும் ஆகியவற்றைக் குறிக்கின்றன. இத் தவ முதலியனவே பொருளாக

எழுந்த நூல்களல்லவாதலால், இவற்றை ஆங்காங்குக் குறித்துக் காட்டுவதே இயல்பாக அமைந்திருக்கிறது. மேலும் காண்போமாயின், வேள்வி வேட்டலும் சங்க விலக்கியங்களில் அருகிக் காணப்படுகிறது. தொல்காப்பியம் வேள்வி வேட்டலைத் தமிழர் வாழ்க்கையில் காணுமை யால், அதனை அவர் தம் இல்வாழ்க்கைக் குறிப்பில் குறிக்கவில்லை.

இது நிற்க, சங்க விலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் தமிழர்களால் வழிபடப்பட்ட கடவுளர் பெயர்கள் காணப்படு கின்றன. இந்திரன், பிரமன், திருமால், முருகன், சிவன் ஆகிய கடவுளர் செய்திகளும் சங்க நூல்களில் குறிக்கப்படுகின்றன. இவர்களைப் பற்றிச் சங்க நூல்கள் குறிக்கும் வரலாறுகள் பின் வந்த திருமுறைகளிலும் புராணங்களிலும் காணப்படுகின்றன. சங்க காலத்துக்குப் பின் வந்த சிலப்பதிகாரத்திலும் சங்க நூல்களிற் காணப்பட்ட குறிப்புக்கள் உள்ளன. சங்க விலக்கியத்துட் காணப் படும் இசைப் பாட்டுக்களும், சிலப்பதிகாரத்துட் காணப்படும் இசைப் பாட்டுக்கள் பலவும் கடவுள் வழிபாடே பொருளாகக் கொண் டுள்ளன. பின் வந்த சைவத் திருமுறைகளும் இசைப் பாட்டுக்க ளாகவே யுள்ளன. இவற்றை நோக்குமிடத்துப் பண்டைநாளில் நிலவிய இசைத் தமிழ்ப்பகுதி கடவுட் கொள்கைக்கு ஏற்றதாக அமைந்திருக்கு மென்பது புலப்படும். அப்பகுதி கிடைக்காமையால், அக் காலத் தமிழர் சமயம் இன்னதெனத் தெளிய அறிய இயலா தாகின்றது.

சங்க விலக்கியங்களிற் காணப்படாத சமண் சமயம் சிலப்பதி காரத்தும், பௌத்தம், சைவம், வைணவம், நியாயம், வைசேடிகம், சாங்கியம், மீமாமிசம் முதலியன மணிமேகலையிலும் காணப்படு கின்றன. மணிமேகலை காலத்துச் சைவ வாதம்,

* "இருசுடரோ டியமான னைம் பூதமென்று
எட்டு வகையும் உயிரும் யாக்கையும்
கட்டிநிற் போனும் கலை யுருவினோனும்
படைத்து விளையாடும் பண்பினோனும்
துடைத்துத் துயர் தீர் தோற்றத்தோனும்
தன்னில் வேறு தானொன் றில்லோனும்
அன்னோ னிறைவனுகும்." என்று கூறுகிறது.

இதனுல், சிவனே இறைவன்; உயர்வற உயர்ந்த ஒருவன்; நிலம், நீர், காற்று, தீ, விண் ஞாயிறு, திங்கள், உயிர் என்ற எண் வகையும் அமைத்திருப்பவன்; உயிரையும் உடம்பையும் கட்டி நிறுத்துபவன்; பல்வகைக் கலைகளும் தன் வடிவாக வுடையவன்; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐவகைத் தொழிலும் உடைய வன்; இத் தொழில்களை விளையாட்டாகச் செய்வது அவற்குப் பண்பு என்பது விளங்கும். மணிமேகலையில், அளவை வாதத்துக்குப் பின்

* இக்கருத்துச் சைவத் திருமுறைகளிலே யன்றி, ஆதி சங்கரரெழுதிய தக்கிணுமூர்த்தி துதியிலும் (9) காணப்படுகிறது.

இது கூறப்படுதலால், அவ் வளவைகளும், அவற்ருல் அளந்து காணப்படும் தத்துவங்களும் இச் சைவத்துக்கும் உரியவாம் என்பதும் விளங்கும்.

இவ்வாறு மணிமேகலை காலத்தில் சைவ முதலாகப் பல்வகைச் சமயங்களும் நிலவுதற் கிடமாகிய இத் தமிழகத்தில், கி. பி. ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்திற்குள், சைவ முதலிய சமயங்கள் ஒளி மழுங்க, சமணமும் பௌத்தமும் மேம்பாடெய்துகின்றன. காபாலம், பாசுபதம் முதலிய சமயங்களும் தோன்றியிருந்தவையாயினும், சமண பௌத்தங்களின் முன்னே செல்வாக்கிழந்திருந்தன. விரைவில் சமணமும் பௌத்தத்தை யொடுக்கி நிமிர்ந்து சிறப்பதாயிற்று. பாண்டி நாட்டிலும் தொண்டை நாட்டிலும் சமண் சமயமே அரசியல் செல்வாக்கால் சிறப்பு மிகுவதாயிற்று. தொண்டை நாட்டில் மகேந்திரவன்ம பல்லவனும் பாண்டி நாட்டில் நெடுமாறனும் சமண் சமய வேந்தர்களாகத் திகழ்கின்றனர். ஏழாம் நூற்றுண்டில் நாவரசர், ஞானசம்பந்தர் என்ற இருவரும் தோன்றி, பண்டைச் சைவ சமயத்தைத் தமிழக முழுவதும் சென்று திரிந்து பரப்பி நிலைநாட்டுவாராயினர். நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சை என்ற சமயங்களின் நற்கொள்கைகளுட் பல சைவத்தில் கலந்து கொண்டன, அடுத்து வந்த ஐந்து நூற்றுண்டுகளுக்குள் தமிழகம் எங்கும் சைவமே மேலிடம் பெறுவதாயிற்று. பண்டைத் திருமால் வழிபாடும் ஓரளவு ஓங்குவதாயிற்று. மீமாஞ்சை சமயக் கலப்பால் நாட்டில் வேள்வி செய்தலும் மிகுவதாயிற்று. நாவரசர் முதல் சேக்கிழார் ஈருகவுள்ள சைவச் சான்ருேர் நூல்கள் வேள்வி வேட்கும் செயல்கள் ஆங்காங்கு நிகழ்வதைக் குறிக்கின்றன. பௌத்தமும் சமணமும் ஒளி மறைந்ததற்குக் காரணம், அவற்ருல் கண்டிக்கப்பட்ட கொலை வேள்விகள் ஒழியத் தலைப்பட்டது மொன்ருகும்.

இந்நிலையில் பத்தாம் நூற்றுண்டிலும் அதற்குப் பின்னரும் வந்த தமிழ் மன்னர்களும் பிற செல்வர்களும் கோயில்களைப் பெருஞ் செல்வ நிலையங்களாக்கத் தலைப்பட்டனர். ஒருபால் கோயில்கள் கல்வி நிலையங்களாகவும் கலைக் கோயில்களாகவும் திகழ வேண்டுமென்ற கொள்கை தோன்றி உருப்படுவதாயிற்று. வடமொழிப் புலவர் பலர் பல்லவ வேந்தராலும் தமிழ் வேந்தர்களாலும் தமிழகத்திற் குடியேறினர். சைவநூற் கொள்கைகளும் கருத்துக்களும் வடமொழியில் இடம் பெற்றன. அந்த வடமொழி யாகமங்கள் செல்வக் கோயில்கள் தோறும் சட்டங்களாக அமைந்தன.

இவ்வாறு இரண்டு நூற்றுண்டுகள் கழிந்தன. இக்காலத்தில் தமிழகத்தில் நிலவிமறைந்த பல்வகைச் சமய நற் கருத்துக்களோடியைந்து, சிவபரம்பொருளை முதற்பொருளாகக் கோயில்கட்குச் சென்று வழிபட்டொழுகும் உண்மைச் சைவநெறி உருப்பட்டுவருவதாயிற்று. ஆயினும் கற்ருேரிடையே, தத்துவங்களை ஆராய்தலும் அவற்றின் வாயிலாக இறைவனை யடைதற்குரிய நெறிகாண்டலும் பற்றி பேராராய்ச்சி நிலவத் தொடங்கிற்று. சாங்கியம் யோகம்

என்ற சமயக்கலப்பால் யோக முறையும் சைவத்திற் கலந்து மேம் பட்டது. இந்நிலையில் உய்யவந்த தேவநாயனூர் முதலிய சான்ருேர் தோன்றி, தத்துவ ஆராய்ச்சியும் யோகப்பயிற்சியும் சிவவழிபாடும் வேண்டுவன என வற்புறுத்தினர். தத்துவ ஆராய்ச்சியும், யோக நூலாராய்ச்சியும், பண்டைய வழிபாட்டுச் சிவநெறியும் கற்ருே ரிடையே பெருங்கலக்கத்தைச் செய்தன, உய்யவந்த தேவநாயனூர், "எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவர் கோட்பாடுடைய, அத்தனை யும் சென்றங்களவாதே" என்பனபோன்ற உரைகளால், வழிபாட்டு முறையை நிலைநாட்டினர்.

இவ்வாறிருக்கையில் மெய்கண்ட தேவர் தோன்றித் தத்துவ வாராய்ச்சியும் சிவவழிபாடும் சிவனடியார்களைப் பேணலுமாகிய மெய்கண்ட சைவநெறியைத் தாம் பாடிய சிவஞான போதத்தால் வெளியிடலானூர். இதன்கண் சங்ககாலம் தொட்டுவந்த சிவவழி பாடும், நாவரசர் முதலியோரால் அருளிச் செய்யப்பட்ட வழிபாட்டு நெறிகளும் சேக்கிழார் முதலியோரால் வற்புறுக்கப்பட்ட சிவனடி யார்ப் பேணலும் அமையக்கண்ட தமிழ் நன்மக்கள் அதனைப் பெரிதும் மேற்கொள்வாராயினர். அக்காலத்தே சகலாகமபண்டித ராக விளங்கிய அருணந்தி சிவனூர் தாமும் அதனை மேற்கொண்டு, இதற்குள் வடமொழியில் தோன்றியுருவாய் விளங்கிய ஆகமக் கருத் துக்களை இயைத்துச் சிவஞான போதத்துக்குச் சிவஞான சித்தி யென்னும் பெயரால் உரையெழுதினூர்.

இக்காலத்தே சங்கரரால் நிறுவப்பட்ட வேதாந்த மெனப் படும் சமயமும் இராமானுசர் நிறுவிய வைணவ சமயமும் நாட்டில் தக்க இடம் பெறலாயின. சைவநெறிக்குள்ளே கொள்கை வேறு பாட்டால் பல அகச் சமயங்கள் தோன்றின. இதனுல், சமய நூல்கள் பலவும் புறமத மறுப்பும் தன்மத நிறுப்புமாகிய நெறிகளில் எழுதப்படுவனவாயின. பண்டு தொட்டே நிலவிச் சிறந்து வந்த சைவ நூல்கள் பல, வடமொழியில் புகுந்துவிடவே தமிழரிடையே நிலவுந்திறம் இழந்தன. இக்காலத்தே ஆங்கிலமொழியின் ஏற்றத் தால் நாட்டுமொழி நூல்கள்பல பேணுவாரின்றியொழிந்ததுபோல, அக்காலத்தே வடமொழி யேற்றம் பெற்றதனுல், சைவத் தமிழ் நூல்கள் பல மறைந்தன. தமிழில் எழுந்த சிவஞானபோதம் வடமொழி ரௌரவாகம மாகியதும் இக்காலத்தேயாம்.

பதினன்காம் நூற்ருண்டின் தொடக்கத்தே கொற்றவன்குடி உமாபதிசிவனூர் முதலிய சான்ருேர் தோன்றிச் சிவப்பிரகாசம் முதலிய நூல்களால், சிவஞானபோதம், சிவஞான சித்தியென்ற தமிழ் நூல்களை முதலாகக் கொண்டும் சைவாகமங்களைத் துணையாகக் கொண்டும் இன்றைய சைவ சித்தாந்த சமயத்தை உருப்படுத்தித் தரு வாராயினர். இவ்வாறே வடமொழியிலுள்ள ஆகமங்களுட் சிலவற் றிற்கு வடமொழியில் உரைகள் காணப்பட்டன. வடமொழியா ளர்க்குள்ளேயும் சங்கர வேதாந்தத்தைப் பின்பற்றினேர் தொகை

மிகுவதாயிற்று. அவர்கள் வேதாந்தமெனப்படும் உபநிடதங்களை யும் வியாசர் பாரதத்துட் கூறிய பகவற் கீதையையும் துணையாகக் கொண்டு சிவாகமங்கள் பிரமாணமாகா என வாதம் புரியவே, சைவ சித்தாந்த நெறி நிற்போர், சிவாகமங்களும் பிரமாணமே என நிலை நாட்டும் கடமையுடையராயினர். “வேதசாரம் இதம் தந்த்ரம் சித்தாந்தம் பரமம் சுபம்” என மகுடாகம முதலாயின கூறலாயின. இவ்வகையில் சைவ சித்தாந்த நெறி பழமையும் புதுமையும் கலந்து செவ்விய வகையில் தமிழகத்தில் நிலைபெறுவதாயிற்று.

இந்நிலையில் அரசியலில் பெருங்குழப்பங்கள் உண்டாயின. வடுக வேந்தரும், முகமதிய மன்னரும் ஆங்கிலர் முதலிய மேனுட்டவரும் தம்முள் போராடி நிற்க, பெருஞ்செல்வ நிலையங்களாக இருந்த கோயில்கள் செல்வாக்குடையார் அவர் வழிநிற்கும் பண்டிதர் ஆகிய இவர்தம் கைவசமாயின. பொது மக்கட்கும் கோயில்களுக்கும் தொடர்பு. நெருக்கமாக உண்டாகாவண்ணம், கோயில்நிகழ்ச்சிகள் முழுதும் வடமொழியில் உண்டாயின. திருமுறையோதுவோர், திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வோர் முதலியோர் விலக்கப்பட்ட னர். சுருங்கச் சொல்லுமிடத்து, தமிழ்நாட்டுத் தமிழர்கோயிலுள் தமிழ்மொழி விலக்கப்பட்டது. கோயிலில் உள்ள கடவுட்கும், கோயில்களுள்ள வூர்கட்கும் வடமொழிப் பெயர்கள் உண்டாய் விட் டன. வடமொழி யறியாத தமிழருள் மக்கட் டொகை மிகுதியும் செல்வாக்கும் இல்லாதார் தாழ்த்தப் பட்டோரும் ஒதுக்கப்பட்டோரு மாய் விலக்குண்டொழிய, கோயில்கள் தீய தொழில்கட்கும் செல்வக் களியாட்டுகளுக்கும் இடங்களாயின.

தமிழருள் கோயில்கட்குச்சென்று வழிபடும் தகுதிபெற்ருேர்க்கு ஆகமங்களிற் கூறப்படும் தத்துவங்களும் சிவபேத சத்திபேதங்களும் மந்திர வகைகளும் புவன வகைகளும் நடைமுறையில் பயிலப்பட வேண்டும் என்ற கருத்தால், தீக்கைகளும் சந்திமந்திரங்களும் சிவ பூசைகளும் வடமொழியில் கற்பிக்கப்பட்டன. பொருளறியாத வட மொழியில் கற்பிக்கப்பட்ட தமிழர், இவற்றைச் செய்வதேயமையும்; கோயில் வழிபாடு இன்றியமையாத தொன்றன்று என்றெண்ணி, கோயில்கட்குச் செல்வதை விடுத்தனர். இவற்றைக் கற்பிப்போரும் கற்போரும் குருடும் குருடும்கூடிக் குருட்டாட்டமாடுவதுபோலப் பொருளறியாத வடமொழியில் தீக்கையும் சிவபூசையும் பெறுவித் தும் பெற்றும் ஆண்டவனும் அடிமையும்போல ஒழுகலாயினர். இவற் றைக் காண்போருள் அறிவுடையோர், அருவருப்புற்றும், பொரு ளில்லார் அச்சமுற்றும் நீங்கினர். கோயிற்குச் செல்லும் தகுதி யுள்ளோருட் பலர் ஆங்குக் காணப்படும் உயர்வு தாழ்வு, சாதிகுல வேற்றுமை, தீச்செயல் முதலியவற்ருல் கோயில் வழிபாட்டையும் கைவிடுவாராயினர்.

சுருங்கச்சொல்லுமிடத்து, சங்ககாலத்துச் சமயநூல்கள் காணப் படாமையால் நமக்குத் தெளிய விளங்காதிருந்த சிவவழிபாடாகிய சைவம், மூவர் முதலிகள் காலத்தில் நன்கு நிறுவப்பட்டு அவர்கட்குப்

பிற்காலத்தே திருந்தியகோயில்களை இடமாகக்கொண்டு, மன்னர் செல்வர் முதலியோரால் பேணப்பெற்று, மெய்கண்டதேவர் முதலிய சான்றோர்களால் செவ்விய ஒழுக்கம் வகுக்கப்பெற்றுச் சிறப்புற்ற சைவம், இன்று சாதிகுல வேற்றுமையிலும் தனித்துண்ணும் சோற்றிலுந்தான் நிற்கிறது. மூவர் முதலிகள் வழிபட்டுப் பரவிக்காட்டிய சைவநெறியில்லை; மெய்கண்டார் சாதனமும் பயனுமாகவகுத்தோதிய சமய வுணர்வு இல்லை. கோயில்களிலும் மூவர் முதலிகள் அருளிய திருப்பாடல்கள் பூசை செய்வோரால் ஓதப்படுவதில்லை. பொது மக்கள் விளங்கிக் கொள்ளத்தக்க மொழியில் பூசனைகளும் நடைபெறுவதில்லை; பொதுமக்கள் பலரும் சென்று அங்குள்ள இறைவனை வழிபடுதற்கு இடமும் தரப்படுவதில்லை. சமய நூல்களைப் படிக்குமிடத்துக் காணப்படும் பொருட்குக் கோயில்களில் சான்றுகளும் இல்லை. சமய வுணர்வு வேருகவும் கோயிலில் நிகழ்வன வேருகவும் உள்ளன: சமய நிலையங்களாய் அமைந்த கோயில்கட்கும் சமய ஞானம் நல்கும் நூல்கட்கும் தொடர்பில்லாத வகையில் சைவம் நிற்கிறது.

சைவநெறி நிற்பார் மேற் கொண்டொழுகத் தக்க நெறியை மெய்கண்டார் ஒரு வரியில் சிறு சொற்ருெடரால் கூறியுள்ளார். அது " தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் " என்பது. தமமை யுணர்ந்து தம்மை அடிமையாக வுடைய சிவ பரம் பொருளை யுணர்தற்கு வேண்டும் அறிவு நிகழ்ச்சிகள் கோயில்களில் காணப் படுவதில்லை. தலைவனுகிய இறைவனை யுணர்ந்தோர், எல்லா மக்களையும் தம்மைப் போலப் பேணி மதிக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்ருர். முதல்வன் திருமுன்னுகிலும் யாவரும் ஒரு தன்மையராகப் பேணப்படுவது சைவர்களுக்குத் தலையாய அறமாகும். அவ் வறத்தைக் கொன்று, தாம் வாழ ஏனேர் தமக்கு அடிமையும் கீழோருமாகக் கோயில்களில் மதிக்கப்பட வேண்டு மென்போர் கையில் சைவமும் சைவக் கோயில்களும் தங்கிக் கீழ்மையுறுவது சைவத்தின் இற்றை நிலையாக வுளது.

காணுர்க்கும் கேளார்க்கும் மெய்யால் உழைக்கும் திறமிழந் தார்க்கும சமய வுணர்வு கொளுத்தலும் உணவும் உடையும் மருந்தும் கொடுத்துதவு முகத்தால், உடம்பு தாங்கி, பதி புண்ணியம் புரிந்து உய்தி பெறச் செய்தற்கென விரிவாக அமைக்கப்பெற்ற கோயில்கள் அத் துறையில் பயன்படா தொழிவது சைவத்தின் இற்றை நிலையாக வுளது.

இவ்வாறே, சமய நூல்கள் கூறும் வகையில் உண்மைச் சைவ ராயினுர் செய்தற்குரிய நற் செயல்கள் பலவும் சைவர்கள் கோயிலில் நடைபெற வேண்டியிருக்க, அவை நடைபெருதிருப்பது இற்றை நிலையாக வுளது.

" ஞாலம் நின்புகழே மிக வேண்டுந்தென்
னுலவாயி லுறையு மெம்மாதியே. "

சொல்லாட்சி.

நம் செந்தமிழ் மொழியானது ஓர் உயர்ந்த மொழி ; தனிமொழி; செம்மொழி; நம்மொழி, கொண்ட கருத்துக்களையெல்லாம் தடையின்றி வெளியிடக் கூடியபடி, சொற்கள் நிரம்பியிருப்பது. வேண்டும் சொற்களை எளிதின் ஆக்கிக் கொள்ள இடந்தருவது.

சில ஆண்டுகளுக்குமுன் நம் தமிழ்ப்பொழிலில் அறிவு நூற்சொற்கள் பல வெளிவந்தன; பின்னும் வெளிவரும். ஆக்கிய சொற்களை ஆளுதல்வேண்டும்.

இது நிற்க, சொற்களெல்லாம் பொருள் குறித்தனவே என்பது ஆன்றோர் கொள்கை. பொருள் இல்லாதனவென்று நாம் கருதும் பல சொற்கள் உண்மையில் இல்லாதனவல்ல; பொருள் மறைந்திருப்பன. உருத்திரிந்து பொருள் விளங்காதிருப்பனவும் உண்டு. உண்மையுருத் தெரிந்தும் பிழையற வழங்க விரும்பாத தமிழர் மனநிலை இரங்கத் தக்கது. இவற்றையெல்லாம் ஆராய்வதுதான் இப்போதைய கருத்து.

* * * *

வரவு, செலவு. வரும்பொருளை வரவு என்பது போலச், செல்லும் அல்லது செலவாகும் பொருளைச் செலவு என்றல் வேண்டும். சிலவு என்றல் பிழையாகும்.

பற்று, வரவு ஒருவரிடமிருந்து வரும்பொருளை வரவு என்கிறோம். ஒருவருக்குக் கொடுத்த அஃதாவது ஒருவரைப் பற்றிய பொருளைப் பற்று என்றல்வேண்டும். பத்து என்று பிழைபடச் சொல்கின்றோம்.

தொகை எண்களைக் கூட்டித் தொகுத்தது தொகையாகும். பொருளின்றித் துகை என்று சொல்கின்றோம்.

சொற்களைத் தவருக வழங்குவதற்கு முதற் காரணம் பொருள் தெரியாமை ஆகலாம். பொருள் விளங்கிச் சொற்களின் உண்மையுருத் தெரிந்தும், அவற்றைப் பிழையற வழங்க விரும்பாத தமிழர் மனநிலை இரங்கத் தக்கது ; மொழிக்குக் குறைதேடுவதும் ஆகும்.

ஓரன்பர்.

தமிழ் அன்பர்களுக்கு அறிவிப்பு.

தமிழ் மொழியின் இலக்கிய வளர்ச்சிக்காக நாட்டில், ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் தமிழ்ச் சங்கம், கழகம், மன்றம், இல்லம், நிலையம், குறிப்பாகத் திருவள்ளுவர் கழகம், சன்மார்க்க சங்கம், ஆகியவற்றின் முழு முகவரியையும், தலைவர், செயலாளர், முகவரியையும் கீழ்க்கண்ட இடத்திற்குத் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அ. மலையப்பன், செயலாளன்,
திரு முருகன் நிலையம்,
4, மணிநகரம், மதுரை.

மதுரை,
8-7-46.

மகிபாலன்பட்டி,
19—6—'46.

மகாமகோபாத்தியாயர், பண்டிதமணி,
திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் கல்லூரி ஆசிரியரும் நீண்ட காலமாக அச் சங்கத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வருகின்றவர்களும், தமிழ் நூல்களைச் செவ்வையாகக் கற்றுப் பல அரிய இலக்கியங்களுக்கு உரையெழுதியவர்களும் ஆகிய கரந்தைக் கவியரசு, திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்களை இத்தமிழுலகம் நன்குஅறியும். எனக்கு நெடுநாட் பழகிய நண்பராவர். இவர்களுக்கு அண்மையில் அறுபதாம் ஆண்டு வாழ்த்து விழா நடைபெறும். அக்காலத்துத் தமிழ் அன்பர்களின் நன்கொடையாக ஒரு பொற்கிழி வழங்கப் பல அன்பர்கள் முற்பட்டிருக்கின்றனர். அதற்குத் தமிழ்ச் செல்வர்களாகிய அன்பர்கள் எல்லோரும் மனம் உவந்து நல்கும் பொருள், அவர்களுக்கு உதவியாதலோடு தமிழ் ஆக்கத்திற்கும் சிறந்த பயன் விளைப்பதாகும்.

மு. க.

கரந்தைக் கவியரசு,
திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்
அறுபதாம் ஆண்டு வாழ்த்து

திரு. பிள்ளையவர்களது அறுபதாம் ஆண்டு நிகழ்ச்சிபற்றிய வாழ்த்து வேண்டுகோள், அன்பர்கள் வெளியிட்டதை யாவருமறிவர்.

நிகழும் விய ஆண்டு ஆடித் திங்கள் 18-ஆம் நாள் (2—8—46) வெள்ளிக்கிழமை, பிற்பகல் 4 மணிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தே அவ் வாழ்த்துக் கூட்டம் நிகழும்.

தமிழன்பர்கள் கூட்டத்திற் கலந்து சிறப்பித்தருள வேண்டுகின்றோம். அதுபோது பிள்ளை யவர்கட்கு அளிக்கும் தமிழ்த்தாயின் வாழ்த்து நன்கொடை நிதிக்கு அன்பர்கள் மனமுவந்து அளிக்கும் தொகையினைப் பொருளாளர்க்கு முன்னரே அனுப்பியருள வேண்டுகின்றோம்.

செயலாளர்,
திரு. அ. கணபதிப் பிள்ளை அவர்கள்
திரு. அ. பொன்னனண்ணுக் களத்தில்வென்றார் அவர்கள்
பொருளாளர்.
திரு. வி. அ. அரங்கசாமி அவர்கள்,
க. த. ச. புலவர் கல்லூரி ஆசிரியர்,
Karuntattamkudi, Tanjore.

115 - 118 Pages

MISSING IN BOOK

உலகியற் றுறையில் ஊணுடை முதலா
ஒருசில தேடியே உழன்று
பலவியற் றுன்பம் பல்வகைக் கவலை
பகரருந் தொல்லைகள் நெருக்க
மலைவியன் மனத்தின் மயங்குறும் மாந்தர்
மறந்தனர் துன்பெலாம் மகிழக்
கலையுயர் இன்பங் கனிவொடும் நல்கிக்
காப்பவர் புலவரே யலரோ ?

திருத்தகு முனிவர், சேக்கிழார், கம்பர்
சிறந்தநல் வள்ளுவர், இளங்கோ
பொருட்கலைத் துறைகள் போகிய சங்கப்
புலவர்கள் என்றிவ ரோடும்
அருட்டிறத் தான்ற நால்வர்கள் ஆழ்வார்
அருமையும் பெருமையுங் கருதிற்
றெருட்டுறு புலவோர் சீர்த்தியும் சிறப்பும்
தெரித்திடல் எளியதொன் றேயோ ?

தீங்கெவர் பிறர்க்கும் சிறிதெனும் நினையாச்
செம்மலும், ஒப்புர வொல்கா
தோங்குறு நலனும், ஒழுக்கமும் சால்பும்.
உலகெலாம் இன்புறச் செயலே
தாங்கொளும் குறிக்கோள் எனும்பெருந் தகவும்
தமிழறி புலவர்தம் இயல்பாம்;
ஈங்கிது கோவூர் கிழார்முதல் இயம்பும்
எனைப்பல புலவராற் றெளிக!

இத்தகு சிறப்பின் இலங்கெழிற் புலவோர்
இயல்பினை இனைத்தெனத் தேறார்
வித்தகம் பேசும் விழலர்கள் சில்லோர்
"வெருவரும் அணுவெடிக் குண்டின்
மிக்குயர்ந் தோங்கும் அறிவியல் மேன்மேல்
மேலைநாட் டின்றெனிற் சிலநூல்
கற்றுருப் போட்ட கலைஞராற் செயலாங்
காரியம் ஈங்கெவன் ?" என்பார்.

இங்கிவர் விதண்டை இழுக்கெலாந் தெளிப்பின்
எனைப்பெரி தகலுமிஃ ததனால்
ஒன்றுமீண் டுரைத்தற் குன்னல மேனும்,
" ஒருபெரும் நாட்டினுக் குறுப்பு
நன்றுயர் கலைமொழி நலத்தகு சமயம்
நவிலுநா கரிகமென் றிவைகள் "
என்பரால், அவற்றுள் கலைமொழி என்னும்
இருதிறக் குரியவர் எவரே ?

எனைத்துணைத் தானிவ் வறிவியல் ஓங்கிற்
றென்னினும், கலைமொழி இன்றித்
தினைத்துணை தானும் சிறுவரை யேனும்
சிறப்புற நிலத்தினில் நிகழா
மனித்தர்தம் வாழ்க்கை எனமதித் தறியும்
மதுகையர் இரண்டிவை போற்றும்
நினைப்பின ராவர், நெட்டுருப் புலமை
நெறியரே அதுசெயத் தக்கோர்.

அறிவியற் கலையோ, அயற்பிற கலையோ
அவையெலாந் தாய்மொழி யறிவே
நெறியென வளரும், நீணிலம் போற்றும்
நெடும்புகழ் அறிவியல் வல்ல
அறிஞர்கள் எல்லாம் அவரவர் மொழியின்
அருந்திறற் புலவர்தம் நூற்கள்
முறையுறக் கற்றே முதுக்குறை வெய்தி
முன்னிலை யுற்றனர் என்க.

எதுகுறித் தெனினும் மேலைநாட் டினையே
எடுத்தெடுத் தியம்பிடும் இன்னோர்
பொதுவுற நின்று, புகழ்செகப் பிரியர்
முதலுறும் புலவரை யெல்லாம்
விதிமுறை அன்னோர் விதந்தனர் வியந்து
விருப்புறப் போற்றுதல் உணரின்
"மதிமிகு புலவர் செயலெவன்?" என்றே
மருளுரை வழங்குவ ரேயோ?

என்றிது காறும் இயம்பிய வாற்றால்,
எனைச்சிலர் பிறருநல் லறிவைக்
கொன்றிட லொப்பக் குறைபல புலவோர்க்
கூறினும் மாறவர்க் கிறுத்து
நன்றுறு அவர்தம் நவையுரை மறுத்து
நல்லறி வவர்க்கறி வுறுத்துப்
பொன்றறும் இயல்பிற் பொருந்துயர் சிறப்பிற்
புலவரைப் போற்றுக! நன்றே!!

புலவரைப் போற்றிப் பொருட்கலை பலவும்
பொலிந்திடப், புலவர்கல் லூரி
சிலவல பலப்பல திறப்பட நிறீஇத்
தேளத்தின் இழிவெலாம் ஓரீஇ
உலகெலாந் தமிழர் உயர்புகழ் பரவ
உறுபெருஞ் செயல்பல உஞற்றி
நலமெலாம் உறீஇ நனிமிக வாழ்க!
நற்றமிழ், வாழியர் தமிழர்!!

மலையர் வாழ்க்கை வரலாறு

வித்துவான், ச. கணபதி, துறையூர்

சேர, சோழ, பாண்டியர் ஆட்சி புரிந்த பழங் காலத்தில் தமிழ் நாடு. செந்தமிழ் நாடும் அதைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளுமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை, 1. தென்பாண்டி, 2. குட்டம், 3. குடம், 4. கற்கா, 5. வேண், 6. பூழி, 7. பன்றி, 8. அருவா, 9. அருவா வடதலை, 10. சீத நாடு, 11. மலாடு, 12. புனல் நாடு, என்பனவாகும். இப்பன்னிரு நாடுகளுள் குட நாடு, குட்ட நாடு, பூழி நாடு, மலை நாடு ஆகிய நான்கும் சேர மன்னன் ஆட்சியிலிருந்து வந்தது. இந் நான்கும் சேர்த்து, கொங்குமண்டலம் என அழைக்கப்பெற்றது. மலை நாடு, மலாடு, மலையமான் நாடு எனும் பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்தது. அம் மலையிலுள்ள நாடுகளில் வாழ்ந்தோர் மலையர், மலைவாணர், மலையாளிகள், மலைவாசிகள் என அழைக்கப்பெறுவர். இதற்குச் சான்று திருஞானசம்பந்தர் பல தலங்களையும் சுற்றிப் பார்த்து வருங்கால் பழுவூர் அடைந்த போது அம்மலை நாட்டுவாணர்கள் சம்பந்தரை வணங்கினர் என்னுமிடத்தில் ' மண்ணினிற் பொலிகுல மலையர் தாந்தொழுது, எண்ணில் சீர்பணிகள் செய்து ஏத்துந் தன்மையால் ' எனச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறுகிறார். இவ்விடத்து மலையர் என்ற சொல் மலைவாணர் என்ற பொருளில் வழங்கப்பட்டிருக்கிறது. ஏனைய சொற்கள் உலக வழக்கில் வழங்குவன காண்க.

உலகத்தில் முதன் முதலில் தோன்றி வாழ்ந்தவர் மூத்த குடியினராய தமிழ் மக்கள் என்ற செய்தி வரலாற்றால் உறுதிப் படுத்தப் பெற்றதாகும். அங்ஙனம் தோன்றிய மிகப் பழமை வாய்ந்த தமிழ் இனத்தவர் துவக்கத்தில் மலையிலேயே (குறிஞ்சி நிலங்களிலேயே) பன்னெடுங் காலம் தங்கள் வாழ்க்கையைச் செம்மையுற நடத்தி வந்திருக்கின்றனர். அன்னவர்களே குறவர் ஆவர். அவர்களைப் புகழ்ந்து கூறாத பண்டைத் தமிழ் இலக்கிய நூல் ஒன்றுகூடக் கிடையாது.

ஆனால் இன்று தமிழ் நாட்டிலுள்ள மலைவாழ் மக்கள் அனைவரையும் ஆராய்ந்து பார்க்குமிடத்து அவர்கள் அனைவரும் குறும்பர் (கௌண்டர்) இனத்தவராகவே இருக்கின்றனர். பண்டு வாழ்ந்த அக்குறவர் இனத்தவர் யாண்டுச் சென்றனர் என்ற செய்திக்குத் தகுதியான விடை இதுவரையும் கிடைத்திலது.

இதைப்பற்றி நான் கொல்லி, பச்சைமலை வாணர்களை வினவிய தில் அவர்கள் கூறியன: தங்கள் முன்னோர் கச்சித் திருப்பதி (காஞ்சிபுரம்) காடுகளில் வாழ்ந்தவர்கள் சில நலன்கள் குறைவால் அங்கிருந்து அண்ணன் தம்பிகள் மூவர் புறப்பட்டுக் கொல்லி, பச்சை மலை சார் நாடுகளுக்கு வந்தார்கள். வருங்காலத்து அம்மலைகளுக்கு அருகில் ஒரு யாறு சென்றதாம். அவர்கள் இம்மலைகளுக்கு வர வேண்டின் அவ்வியாற்றைக் கடந்தே வரல் வேண்டுமாம். அந்நிலையில் உடன் பிறப்பாளர் மூவருள் பெரியவன் (மூத்த தமையன்) மணம் செய்துகொண்டு மனைவியோடு வந்தவனுகையால் அப்படியே திரும்பி சடையக் கௌண்டன் மலைக்குச் சென்று விட்டானும். அடுத்திருந்த மணமாகாத உடன் பிறப்பினர் இருவரில் நடுவன் ஆற்றைக் கடந்து பச்சைமலையில் குடியேறி, ஆண்டு தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த குறவர் குடிப்பெண் ஒருத்தியை மணந்து வாழ்ந்து வந்தானும். அவன் வழியினரே பச்சைமலை வாணராம். இம்மலையர் தங்கள் நெற்றியிலும் உடலிலும் பச்சை குத்திக் கொள்வர். இவ் வழக்கம் குறவர்களுடைய தாகும். அடுத்து நின்ற மூவரில் இளையவனும் அவ்வியாற்றைக் கடந்து கொல்லிமலை வந்து அங்கு வாழ்ந்த மள்ளர் (பள்ளர்) மரபினரிடத்து ஒரு பெண்ணைப் பெற்று மணந்து வாழ்ந்து வந்தானும். இவன் வழியினரே கொல்லிக் குடிகளாவர். இவர்கள் பச்சைக் குத்திக் கொள்ளமாட்டார்களாம்; பச்சைமலையர் பச்சை குத்திக் கொண்டு தங்கள் வீட்டிற்கு வந்தாலும் சமஉரிமை கொடுப்பதில்லை யாம். சற்று இழிந்தவர்களாகவே கருதுகிருர்களாம். இவ்வரலாறு செவிவழியாக (கர்ணபரம்பரை) வழங்கி வருகின்றது எனக் கூறினர்.

என் நண்பர் சிட்டி என்பவர் பச்சை, கொல்லி, சடையக் கவுண்டன் மலைகளில் வாழ்ந்து வரும் மக்கள் காஞ்சி புரத்துக் காடுகளிலிருந்து வந்தவர்களென்று ஒரு வரலாற்று ஆசிரியர் வரைந் துள்ளார் என்று கூறினுர். முன் கூறிய மலையாளிகள் கூற்றையும், இவ்வாசிரியர் வரைந்துள்ளவற்றையும் வைத்து ஆராயும்போது இக் கூற்று ஒருவாறு உண்மை என்று தெரிகிறது. குறும்பு என்ருல் காடுகள். அக்குறும்பிடை வாழ்வோர் குறும்பர். இக்குறும்பர் பழமையில் காஞ்சியில் நிலக்காடுகளில் வாழ்ந்தனர்; குறவர் இனம் இக்குறும்பர் இனத்தோடு கலந்துவிட்டது. அவர்களில் ஒருசிலர் அழிந்தனர். ஒரு சிலர் மலைகளிலிருந்து நில நாடுகளில் குடியேறி விட்டனர். இவ்வளவில் மலைக்குறும்பர்களின் தொன்மை வாழ்க்கை முறை ஒருவாறு விளக்கப்பட்டது.

இனி அவர்களுடைய இன்றைய வாழ்க்கை முறையைச் சிறிதா தாராய்வோம். குறவர் என்ற பெயர் குறத்தொழிலால் (குறம், குறி சொல்லல், வேட்டையாடுதல்) பெற்ற பெயர். குறும்பர் என்ற பெயர் தாங்கள் இருந்த இடத்தால் பெற்ற பெயர். குறும்புகளில்

வாழ்ந்ததால் குறும்பரானுர். இன்று தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி, தொட்டபெட்டா, ஆனைமலை, ஏலக்காய்மலை, கொல்லி, அடையக் கவுண்டன்மலை, பதனவாடி, சருகுமலை, சேர்வாயன்மலை, போதை மலை, திருமானூர்மலை ஆனந்தாயமலை, நொய்யல்மலை, கல்ராயன்மலை, அருநூற்றுமலை, கோட்டாலைமலை முதலிய பல மலைகளினும் வாழும் மக்கள் குறும்பர் இனத்தவரே. பச்சை, கொல்லி, சடையக்கவுண்டன் மலைகளில் வாழும் இவர்கள் காராளர் என்றும், வேளாளர் என்றும் இருமரபினராயுள்ளனர். இவர்கள் குடிப்பெயர் 1. சக்கரவர்த்தி, (சக்குலித்தி) 2. சொள்ளன், 3. வளைஞ்சன், 4. சினிப்பன், 5. எலியன், 6. குட்டி, 7. கல்கட்டு, 8. சூரிய காட்டான், 9. வேளன், 10. சக்கணன், 11. அரட்டை, 12. சில்லேரி, 13. சூக்கிளி முதலியனவும், ஏனையவும் ஆகும். இம் மலையாளிகள் அனைவரும் தங்கள் பெயருக்கு முன்னுல் மேற் கூறிய குடிப் பெயர்களில் அவரவர்க்குரியவற்றை முதலில் வைத்துப் பின்னுல் தங்கள் பெயரைக் கூறிக்கொள்வர். எடுத்துக் காட்டாக சக்கரவர்த்தி கொங்கன், எலியன் சீரங்கன், குட்டியாண்டி அரியான், வேளச்சீரங்கன், வளைஞ்சக்கொங்கன், சினிப்பக்கொங்கன், சினிப்பச் சீரங்கன், அரட்டை சேவி, சில்லேரி அரப்புளி எனப் பல கூறலாம். சக்கரவர்த்தி என்ற குடிப் பெயருடையார் இவர்களில் தலைவர்; சிறிது உயர்ந்தோராவர். ஆண்டி, சீரங்கன், கொங்கன் என்ற பெயர்களே மிகுதி. சிறிது கற்றவனைப் பள்ளிக்கூடத்தான் என்று அழைப்பர். இது தொழில் பற்றிய பெயராகும்.

பழைய சேர சோழ பாண்டியர் காலத்தில் இம்மாதிரி குடிப் பெயர்கள் பலப் பல வழங்கின. அரசர்களால் அளிக்கப்பெற்ற எட்டி, காவிதி, ஏனுதி, தொண்டைமான் முதலிய சிறப்புப் பெயர் களைப் பண்டைத் தமிழ் நூல்களில் காணலாம். ஏனுதி நல்லுத்திரன், தொண்டைமான் கருணுகரன், சேரமான் பெருமாள், வாணிகன் சாத்தன், சோழன் கரிகாலன், சேரன் செங்குட்டுவன் பாண்டியன் அறிவுடை நம்பி எனச் சிறப்புப் பெயரும், குடிப் பெயரும் அவர்கள் சொந்தப் பெயர்கட்கு முன்னுல் வழங்கி வந்தன. அப்பழந் தமிழர் பழக்க வழக்கங்களை இம் மலையாளிகள் பேணி வருதல் மகிழ்ச்சிக் குரிய சிறந்த முறையாகும்.

நிற்க இவர்கள் ஊர்பெயர், ஆடவர், பெண்டிர் பெயர் மரம் செடி, கொடிகள், யாறு, இடங்களின் பெயர்கள் அனைத்தும் தனித் தமிழ்ப் பெயர்களே. எடுத்துக் காட்டிற்குக் கொல்லிமலையிலிருந்து சில தருவோம். 1. ஊர்பெயர் :— 1. ஓயங்குழி, 2. வெள்ளப்பாழி, 3. கோயிலூர், 4. சோறடைப்பட்டி, 5 வலப்பூர், 6. கல்லாத்துக் கோம்பை, 7. பிலாண்டூர், 8. வாளைப்பந்தி, 9. திகைவாய், 10 சூக்க லாம்பட்டிக் கோம்பை, 11. பசலைக் கோம்பை, 12; வீரகனூர்,

13. கலிங்கம், 14; குரங்கு நாடி, 15; புளியம்பட்டி, 16; மூலக்கண்ணி, 17; ஆலத்தூர், 18; அசக்காடு, 19; புதூர். 20; ஆலமரத்தூர், முதலியனவாகும்.

2. ஆடவர் பெயர் :— 1 குப்பன், 2 வேலன், 3 கருமன், 4 பழனி, 5 ஆண்டி, 6 சேவி, 7 அறப்பளி, 8 சிரங்கன், 9 கொங்கன், 10 பாப்பு (பார்ப்பு) 11 வடமலை, 12 திருமலை முதலியன.

3. பெண்டிர் :— 1 வெள்ளச்சி, 2 செம்மூஞ்சி, 3 கருப்பாயி, 4 மூக்காயி, 5 பழனியம்மாள், 6 பாப்பு, 7 செல்லி (செல்லம்மாள்) 8 வெல்லி, 9 குப்பாயி, 10 குப்பச்சி முதலியன.

4. மரம் செடி, கொடிகள் :— 1 தில்லை, இம்மரத்தின்பால் உடலில் பட்டால் கொப்புளிக்கும். 2 சண்பகம், 3 சடைமரம், 4 குங்குலியமரம், 5 வேங்கைமரம், 8 தேவகன்னி, 7 காட்டிலவு, 8 கோங்கு, 9 செந்தணக்கு, 10 காட்டுமா, 11 ஈருகா, 12 ஆரமரம், (சந்தனம்) 13 பலாமரம், 14 வாழைமரம், முதலியன. ஏலக்காய், மிளகு முதலியன கொடிகள். சுண்டைச் செடி, அன்ஞசிச் செடி எனச் செடி வகைகள் மிகுந்துள்ளன. (பிற்காலத்து வந்த காஃபிச் செடியும் இம்மலைகளில் உள்ளன.)

5. இடம் :— 1 மாசிமலை, 2 மண்மலை, அறப்பளியீசர் கோயில் முதலியன.

6. ஆகாய கங்கை (வான்காவிரி), 2 மாசிமலை அருவி, 3 கானப் பாடியாறு, 4 கதவடிமூலையாறு, 5 நாக்காட்டாறு, 6 தழிகை ஆறு 7 ஆராய்ச்சி ஆறு, 8 மீன்றுறைப்பள்ளம், வெள்ளைப்பாழி அருவி. 10 ஐயாறு முதலியன. மேற்கூறிய பெயர்கள் அனைத்தும் பெரும் பாலும் தனித்தமிழ்ப் பெயர்களே; அதிலும் அழகிய தமிழ்ப் பெயர்கள். ஏதோ பிற்காலத்தில் சிறுவரவில் இரண்டொரு வட மொழிப் பெயர்களும், காஃபிபோன்ற ஆங்கிலச் சொற்களும் கலந்துள்ளன.

அடுத்தபடியாக, கொல்லி மலையைக் கீழ்க்காணும் பன்னிரண்டு நாடுகளாகப் பிரித்துள்ளார்கள். வடபகுதி நாடுகள்:— 1 இடைப் புளி, 2 திருப்புளி, 3 பிறகரை, 4 ஆலத்தூர் (சித்தூர்) 5 பெயில் நாடு என்பன. இவை சேலம் ஜில்லா இராசிபுரம் தாலுகாவைச் சேர்ந்தன.

2. நடுப்பகுதி நாடுகள் :- 1 அரியூர், 2 வலப்பூர், 3 குண்டூர், வாளைவந்தி (இவை சேலம் ஜில்லா நாமக்கல் தாலுகாவை சேர்ந்தன.)

3. தென்பகுதி நாடுகள் :- 1 சேமூர்நாடு, 2 திண்ணனூர், 3 தேவானூர் நாடு என்பனவாகும். (இவை நாமக்கல் தாலுகாவைச் சேர்ந்தனவே) இந்த நாடுகள் நாம் நிலநாடுகளில் மஜரா (Hamlet) என்று சொல்லுகிறோமே அதைப் போன்றனவாகும். ஒவ்வொரு நாட்டிற்கும் பல சிற்றூர்கள் உள்ளன. ஒவ்வொரு சிற்றூருக்கும் ஒவ்வொரு தலைவன் உளன். அவன் பெயர் கிராமக் கவுண்டன். (சிற்றூர்க் குறும்பன்) இவனுக்குமேல் உயர்ந்தவன் ஒவ்வொரு நாட்டிற்கும் (சிற்றூர்க்குறும்பன்) இவனுக்குமேல் ஒவ்வொரு நாட்டிற்கும் தலைமையாயுள்ள நாட்டுக் கவுண்டன். எல்லா நாட்டுத் தலைவர்களுக்கும் உயர்ந்தவன் வலப்பூர் பெரிய நாட்டுக் கவுண்டன். இவனே கொல்லி மலையில் முக்கிய தலமாயுள்ள அறப்பளீசர் கோயிலுக்கும் தலைவன். இவன் பெயர் ஜேம்ஸ். ஆனால் இவன் தமிழன். இவன் தமிழனுயிருந்து கிருத்தவனானன். கிருத்தவத்திலிருந்து தமிழ்ச்சமயத்திற்குப் 'பழயை கருப்பன் கருப்பனே' என மாறிவந்தான். ஆனால் பெயரை மட்டும் மாற்றிக்கொள்ளவில்லை. இவனின் இறந்துபோன தகப்பன் பெயர் கருமக் கவுண்டன் என்பதாகும். மலையிலுள்ள இப் பன்னிரண்டு நாட்டிலுமுள்ள தீர்க்கமுடியாத வழக்குகளெல்லாம் இந்த ஜேம்ஸ் இடம் தீர்புக்கு வரும். இவன் அவர்கள் வழக்குகளைத் தீர்த்து அபராதம் போடுவான். மலையிலுள்ள அனைவரும் இவன் சொற்படி கேட்டு நடப்பர் எனத் தெரிகிறது.

பச்சை மலையிலும் எல்லா நாடுகளுக்கும் தலைவனுயிருப்பவனைப் பெரிய நாட்டுக் கவுண்டன் என்பர். அவனுக்கு உதவியாயிருப்பவனை பெரிய துரை என்பர். நாட்டுக் கவுண்டனுக்குக்குதவியாக துரைக் கவுண்டன் ஒருவன் உளன். நெசக்குளம என்னுமிடத்தில் உள்ள நாட்டுக் கவுண்டனுக்குதவியாக ஒரு துரைக் கவுண்டனும், வன்னுடு நாட்டிற்கு மருதை என்னும் ஊரில் ஒரு துரைக் கவுண்டனும், தென் பரனுட்டிற்கு மலை உச்சியிலுள்ள செங்காட்டுப்பட்டியில் ஒரு துரைக் கவுண்டனும் இருக்கின்றனர். மருதை என்னுமிடத்தில் உள்ள துரைக் கவுண்டனே கிராம முன்சிப்பாகவும் இருக்கிறுன்.

இதேபோல் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த பச்சைமலையிலுள்ள அத்தி நாட்டுக்கு பக்களம் என்னும் இடத்தில் ஒருவன் துரைக் கவுண்டனுகவும் கிராம முன்சிப்பாகவும் உள்ளான்.

சடையக் கவுண்டன் மலையில் ஐந்து பகுதிகளில் (1. சடையக் கவுண்டன் மலை, 2. அரியக் கவுண்டன் மலை, 3. குறும்பக் கவுண்டன் மலை, 4. சின்னக் கல்ராயன் மலை, 5. பெரியக் கல்ராயன் மலை,) ஐந்து ஜாகிர்தார்கள் உள்ளனர். மலை நிலங்கள் அனைத்தும் இவர் கட்குச் சொந்தம். இவர்கள் மலையாளிகளிடம் வரி வசூல் செய்து குறிப்பிட்ட தொகையை அரசாங்கத்தாருக்குக் கட்டுவர். இந்த

இவரும் பெரிய துரை என அழைக்கப்பெறுவர். மலையின் முழு அதிகாரமும் இவருக்கேயாகும். வரி வசூல் செய்யும் உரிமையை நாட்டுக் கவுண்டனிடம் ஒப்பந்த குத்தகைக்கு (Contract) இவர்கள் ஒப்படைத்து விடுவர். அந்நாட்டுக் கவுண்டன் தனக்குக் கீழே கிராமக் கவுண்டனை ஒப்பந்தக் குத்தகைக்கு அமர்த்திக்கொண்டு கிராமங்கள் தோறும் வசூல் செய்வது வழக்கம். இதில் உழைத்த தற்குப் பங்கு இருவருக்கும் உண்டு. வசூல் செய்த தொகை ஜாகிர் தாரிடம் செல்லும். ஜாகிர்தார் உதவிக்குச் சில நாட்டுக் கௌண்டர்களைத் தனிப்பட்ட முறையில் அமர்த்திக்கொள்வர்.

திருமணமுறை :— திருமணமானோர் தாலியில் திருமணப் பொட்டு அணிந்திருப்பர். இவர்களுடைய ஏனைய செயல், நாகரிகங்கள் பழந் தமிழர்கள் செயல், நாகரிகங்களை ஒத்திருக்கின்றன. ஆனால் திருமணமுறை மட்டும் மாறுயிருக்கிறது. ஒத்த குலனும், ஒத்த நலனும், ஒத்த பண்பும், ஒத்த கல்வியும் உடையார் இருவராய் அவனும் பதினாறுண்டுப் பருவத்தனுய், அவளும் பன்னிரண்டு ஆண்டு பருவத்தளாய் தம்முட் கூடுவதே பழந் தமிழர் திருமண முறையாகும். ஆனல் இம் மலைவாணர் பன்னிரண்டு ஆண்டு பருவத்தினன் பதினெட்டு, இருபது வயதுடைய பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றனர். இது பொருந் தாத் திருமணமாகும்; இவ்வாறு திருமணம் செய்து கொண்ட பெண் தன் சிறு வயதான கணவனை விரும்பாள்; கணவனின் தந்தை, அண்ணன் முதலியோரிடமும் (மாமன் முறையினர்) தான் விரும்பிய எவனிடமும் கூடி இன்பம் நுகர்ந்து வாழலாம்; குழந்தை பிறந்தால் வேறெவனிடம் இருந்தாலும் அப்பெண்ணும் குழந்தையும் உரிமைக் கணவனிடம் வந்து சேரவேண்டும்; பெண் வராவிட்டாலும் குழந்தைகள் வந்தே சேரவேண்டும்; இப் பிள்ளைகள் சேர்ந்தவனுக்குப் பிறந்தனவாயினும் இவன் குழந்தைகளாகவே கருதி அழைக்கப் பெறுவர்; இவன் சொத்தின் உரிமை பெறுவர்; தாய் சேர்ந்தவனிடம் இருந்தாலும் இருக்கலாம்; உரியவனிடம் வந்தாலும் வரலாம்;

நிற்க. எவனுவது ஒருவன் ஒரு பெண்ணைத் திருட்டுத்தனமாக அழைத்துச் சென்று கண்டு பிடிக்கப்பட்டால் அவன் சமூகத்தவரால் தீர்மானிக்கப்பெற்ற முடிவுப்படி சமூகத்தவருக்கு ஒரு விருந்து நடத்தி வைக்கவேண்டும்; இதுவே அவன் செய்த குற்றத்திற்குத் தண்டனையாகும்; பெண் அவனைப் பின்னும் விரும்பினால் அவன் பெண்ணுக்குப் பரியம் கொடுத்துவிட்டு அவளை மணந்துகொள்ள லாம்; மலைவாணர் விலங்குகளைப் போன்று கண்டவர் கண்ட பெண்களைச் சேர்த்துக் கொள்ளுதல் அவ்வளவு சிறந்த முறையல்ல வெனக் கருதுகின்றனர்;

பழக்கவழக்கம் :— (மலைவாணர்) இவர்கள் ஆடை தூய்மையாயிராது; அழுக்குப் படிந்திருக்கும்; இவர்கள் ஆடையைப் பெண்கள் சாம்பலைப் பாத்திரத்திலுள்ள நீரில் கலந்து அதில் ஆடைகளைப் போட்டுக் காய்ச்சித் துவைத்து வெளுப்பர்; இதனால் ஆடையின் அழுக்கு நீங்கி தூய வெண்ணிறமாயிருக்குமாம்; இவர்கள் மாதம் ஒருமுறை இருமுறை தான் நீராடுவர்; அப்போது ஒரு வாய் அகன்ற பானையில் நீரைக் காய்ச்சி மரம், இரும்பாலான படிகளால் நீரை முகந்து அனைவரும் ஊற்றிக் குளிப்பர்; மாத மொருமுறை நீராடுவதால் இவர்கள் உடலில் தீ நாற்றம் வீசும்;

மலைகளில் பள்ளிகள் இங்கொன்று அங்கொன்ருக இருப்பதால் இம்மலைவாணர் கல்வியில் மிக மிகப் பிற்போக்குள்ளவர்; இதை மலை யரசாங்கம் கவனித்தல் வேண்டும்;

தெய்வவழிபாடு :— இவர்கள் காளி, பிடாரி, கருப்பு முதலிய சிறு தெய்வங்களையும், சிவன், முருகன் முதலிய பெருந் தெய்வங்களையும் வழிபடுவர்; கொல்லி மலையைக் கொல்லிப்பாவை என்னும் ஒரு அச்சுறுத்தும் தெய்வம் காத்து வந்த காரணம் குறித்து இம் மலைக்குக் கொல்லிமலை என்று பெயர் ஏற்பட்டது என்பர்; ஆனல் அத் தெய்வம் இன்று கொங்காயம்மன் என்னும் பெயரால் அழைக்கப் பெற்று வருகின்றது; இவ்வம்மன் கோயில் சேழூர் நாட்டைச் சேர்ந்த வீரகனூரிலுள்ள சித்தன் குட்டு என்னுமிடத்தில் உள்ளது; இவ்வம்மனுக்கு ஆண்டு தோறும் சண்பக மரங்கள் பூக்கும் காலத்தில் காப்புகட்டித் திருவிழா நடைபெறும்; இச்சண்பகப் பூக்களையே மாலையாகக் கட்டி இவ்வம்மனுக்கு மாலையாகச் சூட்டி வழிபடுவர்; அறப்பளீசர் மலை யீசனையும் இம்மலையர் வணங்குவர்; இக் கொல்லி மலையில் தனி முருகன் கோயிலே கிடையாது; ஆனல் பச்சை மலையில் கம்பூர் எனுமிடத்தில் ஒரு முருகன் கோயில் உள்ளது; இம மலைவாணர் செட்டிக்குளம், பழநி, திருவரங்கம், திருப்பதி முதலிய தலங்கட்கும் சென்று வணங்குவர்; பழங் காலத்தில் மலைபடு தெய்வமாகிய முருகனையே எல்லா மலைகளிலும் வாழ்ந்த மலையாளிகள் வணங்கினர்; ஆனல் இக்காலத்தில் மலையாளிகள் பல தெய்வவழிபாடு செய்வர்.

இவர்கள் விழாக் காலங்களில் பறை, தண்ணுமை, தடாரி முதலிய வாத்தியங்களை ஒலிக்கச் செய்வர்; கொல்லி மலைவாணர் திருமணம் கருமாதிக் காலங்களில் முறையே அந்தணப் புரோகிதரை முன் வைத்து சடங்குகளைச் செய்து, அவர் சென்றதும் தங்கள் நாட்டாண்மைக்காரரை வைத்துத் தாலிகட்டி இறப்புச் சடங்கு செய்து விருந்துண்பர்; ஆனல் பச்சை மலையில் அந்தணப் புரோகிதரையே மலைவாணர் மணச் சடங்குகள், இறுதிநாட் சடங்குகளுக்கு அழைப்பதில்லை; தங்கள் நாட்டு, ஊர்த் தலைவர்களையே வைத்துச் செய்து கொள்வர்.

வாழ்க்கைமுறை :—இவர்களுடைய ஊர்கள் நில நாடுகளைப் போல் ஆயிரம், பதினுயிரக் கணக்கான வீடுகளைப் பெற்றிரா; நூறு நூற்றினும் குறைந்த வீடுகளே (10, 20, 5 கூட) பெற்றிருக்கும்; வீடுகளின் வெளிப்புறம் பன்றிகள் பலாப்பழத்தின் உள் தோல், நரம்புகளைச் சப்பிச் சப்பித் தின்னும் காட்சி அருவருப்பாயிருக்கும்; வீட்டைச் சுற்றிலும் தேக்கநீர், மலக்குப்பை, முதலியன காணப் பெறும்; நாய், ஆடுகளும் காட்சியளிக்கும்; வீட்டின் உட்புறம் சுத்த மாயிருக்கும்; நாற்புறமும் சுவர்கள் எழுப்பப்பெற்று மேலே வேழம் புல்லால் கூரை வேயப்பெற்றிருக்கும். கூரையின்கைவளைகள் மூங்கில் மரங்களே; அவைகளைக் கட்டும் கயிறு பசுங்கானிடை (காடுகளில்) உள்ள பசுங்கொடிகளேயாகும். அவர்கள் வீட்டின் மேற்பரண் கூந்தற் பனைமரங்களின் பலகைகளால் இணைக்கப் பெற்றிருக்கும், வீட்டையடுத்துக் கூலங்கள் (தானியங்கள்] கொட்டிவைக்கச்சேர்கள் இருக்கும், அவைகளில் கோதுமை, தினை, சாமை, வரகு, கேழ்வரகு, காடைக்கண்ணி, கம்பு, புழுதிக்கார்நெல், செந்நெல் முதலிய அங்கு விளையும் விளைபொருள் தானியங்கள் கொட்டப் பெற்றிருக்கும்.

வீட்டின் உள்ளே பரணில் தட்டுமுட்டுச் சாமான்கள் போடப் பெற்றிருக்கும் (கூடை, முறம், சட்டி, பெட்டி முதலியன) ஒருமண் அடுப்பும், மாவு அரைக்க ஆட்டுத்தோல் விரிப்பும், சாமான்களை மாட்ட கயிற்றில் கட்டித் தொங்கும் கவட்டைக் கழிகள் முதலியன வும் அங்கு காணப்படும்.

நாகரிகம் :—1 உடை, கொல்லிமலையில் ஆடவர் கோவணம் கட்டி ஒரு ஐந்து முழ வேட்டியை உடலில் போர்த்தியிருப்பர், சிலர் சட்டை அணிவர்; பெண்டிர் ஐந்துமுழ வெண்ணிற ஆடையைத் தங்கள் மார்பிற்குமேல் மார்பை உள்ளிருத்தி இறுக்கிக் கட்டியிருப் பர். பெண்கள் கச்சு(ரவிக்கை) அணியமாட்டார்கள். பச்சை மலையில் ஆடவர் கொல்லிவாணரைப் போன்றே கட்டுவர்; பெண்டிர்மட்டும் பல நிறப் பதினுறு முழப்புடவைகளை இடுப்பில் சுற்றிக் கொள்வர்; மார்பை மூடாமல் திறந்தே யிருப்பர்; நிலப்பகுதி ஆட்கள் மலைக்குச் சென்ருல் அவர்களைக் கண்ட மலைமங்கையர் இடையில் சுற்றியுள்ள சேலையை எடுத்து மார்பை மூடிக்கொள்வர்.

2, அணிகலன் :—பெண்கள் கூந்தலைக் கொண்டையாக முடிவர், ஆண்கள் பின்புறம் முடிவர்; இருபாலாரும் தலையில் கொண்டை ஊசி குத்தியிருப்பர்; ஆண்கள், கடுக்கன், அரைநாண் மோதிரம், மூக்குத்தி அணிந்திருப்பர்; பெண்கள் புலிநகம்போல வளைந்த ஒரு அணியையும், பொட்டு, குத்தூசி, முள் வாங்கி, காது குறும்பெடுக்கி முதலிய அணிகளையும் ஒரு கயிற்றில் கட்டி மார்பில் அணிவர்; புயவளை (தண்டை) புயத்தில் அணிந்திருப்பர்,

(தொடரும்.)